# திறவுகோல்

ஆனி 2049 / மாத இதழ்



செண்பக வனம்

கர்(ரு)ம அரசியல்

அச்சுறுத்தல், அபாண்டம், அபகரிப்பு

ஆல மூடு

PLAYSCHOOLம் மருத்துவமனையும்

பெருவுடையார் கோவில் என்னும் பேரதிசயம்



வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் குழு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# கர்(ரு)ம அரசியல்



மகாலெட்சுமி

வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்

எனது நண்பர் ஒருவர் இக்குறளினை அவரது புலனத்தில் (Whatsapp) வைத்திருப்பதைக் கண்டேன். இக்குறளின் பொருள் குடிமக்கள் அஞ்சும்படியாகக் கொடுங்கோல் நடத்தும் அரசு நிச்சயமாக விரைவில் அழியும். எதற்காக இக்குறளைக் கொண்டு இக்கட்டுரையைத் தொடங்கினேன் என்று தற்போது உங்களுக்கு புரியும் என நம்புகிறேன். ஆம், கடந்த வாரம் நடந்த, மனம் பதைப்பதைத்த சம்பவத்தைப் பற்றி தான் இக்கட்டுரையில் காண போகிறோம்.

கடந்த வருடம் முதல் பரபரப்புக்கும், பதற்றத்துக்கும் பஞ்சமில்லை நம் தமிழ்நாட்டில். இங்கு தான் உண்மைச் சம்பவங்களைத் திரையிட்டுக் காட்ட வேண்டிய ஊடகங்கள், தேவையற்ற செய்திகளைப் பெரியதாகவும், முக்கியமான செய்திகளை மறைத்தும் ஒளிபரப்பும் அவலங்களும் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. அரசியல் தலைவர்கள், இவர்களைப் பற்றி கூறவே தேவையில்லை. தேர்தல் சமயங்களில் காலில் விழுவதும் பின்பு ஆட்சியைப் பிடித்ததும் மக்களை காலால் மிதிப்பதுமாக காலம் காலமாக செய்து கொண்டிருக்கின்றனர்.

இவையனைத்தும் தெரிந்திருந்தும் மக்களாகிய நாம் தேர்தல் சமயத்தில் அவர்கள் கொடுக்கும் நூறுக்கும் ஆயிரத்திற்கும் விலை போய் விடுகிறோம். கர்மா என்ற ஒரு விசயத்தை நாம் அனைவருமே கேள்விப்பட்டிருப்போம். அதைத் தான் நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நாம் தேர்தலுக்காக பெற்ற நூறுகளும் ஆயிரங்களும் பெட்ரோல் டீசல் விலை ஏற்றத்தின் மூலம் நம்மிடமிருந்து வாங்கப்படுகிறது.

அன்று நம் கர்ம வீரர் காமராசர் எனும் மாமேதையைத் தோற்கடித்ததன் விளைவு தான் இந்த கர்மா. அன்றைக்கு கல்வி இலவசமாக கொடுக்கப்பட்டது, படிக்கும் குழந்தை பசியோடு இருக்கக் கூடாது என்பதற்காக உணவும் இலவசமாக அளிக்கப்பட்டது. தற்போது மழலையர் பள்ளிகளுக்கே இலட்சங்களும், பல ஆயிரங்களும் செலவிடப்படுகிறது. அதோடு மட்டுமில்லாது பசியோடு சத்துணவு சாப்பிட செல்லும் குழந்தைக்கு ஆதார் அட்டை இல்லாமல் உணவளிக்கப்பட்டது.

எதற்காக இவற்றையெல்லாம் கூறுகிறேனென்றால், கடந்த வாரம் தூத்துக்குடியில் நடந்த பதினோறு பேரின் படுகொலைக்கு மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ

நாம் தான் காரணம், நாம் தேர்ந்தெடுத்த அரசியல்வாதிகளே காரணம். நம் கண்களுக்கு தெரிந்தது வெறும் பதினொரு பேரின் மரணம் மட்டுமே, இது போன்று நம் கண்ணுக்கு தெரியாமல் பல சம்பவங்கள் தினந்தோறும் அரங்கேறிக் கொண்டு தான் இருக்கிறது. இதை நான் கூறுவதனால் எதுவும் ஒரு நாளில் மாற போவதில்லை. ஆனால் இது ஒரு பத்து பேரைச் சென்றடையுமானால் அதுவே ஒரு நல்ல மாற்றம் தான். இலவசம், இலவசம் என்று இலவசத்தின் பிடியில் வசப்பட்டுக் கிடந்தோம். அந்த இலவசத்திற்கு விலையாய் பல உயிர்களை இழந்துக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமின்றி தினந்தினம் தமிழகத்தின் ஒவ்வொரு மூலையிலும் ஏதோ ஒரு வாழ்வுரிமைக்கான போராட்டங்கள் அரங்கேறிக் கொண்டு தான் இருக்கிறது.

சுதந்திர இந்தியா என்பது வெறும் பெயரில் மட்டும் தான் இருந்துக் கொண்டிருக்கிறது. தற்போது நடந்துக் கொண்டிருக்கும் இழிவான ஆட்சியைக் காட்டிலும் ஆங்கிலேயர் ஆட்சியே சிறப்பாக அமைந்திருக்குமோ என எண்ண தோன்றுகிறது.

இந்த ஆட்சியானது நம் முன்னோர்களின் தியாகத்தை இழிவு செய்யும் வகையிலேயே அமைந்துள்ளது. இன்றும் நமது அடிப்படை உரிமைகளுக்காக பல தியாகிகள் உருவாகிக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

சாதாரணமாக மாத சம்பளம் வாங்கி பிழைப்பு நடத்தும் தொழிலாளர்களுக்கே, அவர்களின் கல்வித்தகுதிக்கேற்ப நேர்காணல் நடத்தி இந்த வேலையை செய்ய தகுதியுடையவரா என கண்டறியப்படுகிறது. ஆனால் ஒரு அரசியல்வாதியைத் தேர்ந்தெடுக்கையில் ஏன் இவையாவும் நடப்பதில்லை? இன்னும் தெளிவாக கூற வேண்டும் என்றால், நம் வீட்டில் திருமணத்திற்கு பெண் பார்க்கும் போதோ அல்லது மாப்பிள்ளை பார்க்கும் போதோ கல்வி, வேலை, குணம் என்று ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்யும் நாம், நம் நாடாளும் அரசியல்வாதிகளுக்கு ஏன் எந்த தகுதியும் பார்ப்பதில்லை?

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் இறந்த போது வெளிவந்து கடையடைத்து கலவரம் செய்த அரசியல் கட்சிகாரர்கள் அனைவரும் இன்று பதினோறு பேரின் மரணத்திலும் மௌனமாக இருப்பது ஏன்? நடிகை சிறிதேவியின் மரணத்தின் போது அவரின் இறுதி ஊர்வலத்தை நேரலையில் ஒளிபரப்பிய ஊடகங்கள் இப்போது எங்கே சென்றன? மாட்டுக்காக போராடிய அரசுக்கு மனித உயிர் மட்டும் துச்சமாய் தெரிவது ஏனோ? மனிதனுக்குள் மனிதம் சிதைந்துக் கொண்டே இருக்கிறது.

பணம் மனிதனை ஆட்சி செய்துக் கொண்டிருக்கிறது. பணம் மதிப்பிழந்து வெறும் காகிதமாய் தெருக்களில் மூட்டை மூட்டையாக வீசப்பட்டதை 500,1000 ரூபாய் நோட்டுகள் தடை செய்யப்பட்ட போதே கண்டோம். ஆனாலும் மனிதர்களுக்கு பணத்தின் மேலுள்ள மோகம் குறையவே இல்லை. சமீபத்தில் முகநூலில் ஒரு செய்தியைக் காண நேர்ந்தது. அம்பானியின் மகள், மகன் திருமணத்தில் ரூபாய் நோட்டுக்களால் அலங்காரம் நம் நாட்டின் மறுபக்கத்திலோ ஒருவேளை சோற்றுக்கு

கஷ்டப்படும் மனிதர்கள். பன்னாட்டு நிறுவனத்திற்கும் பணக்கார்களுக்கு மட்டுமே சேவை புரிகின்றனர் நம் அரசியல்வாதிகள்.

வகிக்கின்ற பதவியை ஒரு சதவீதம் மதித்தாலும் இது மக்களுக்கான ஆட்சியாகவே அமைந்திருக்கும். இங்கு நடந்து கொண்டு இருப்பதோ பணத்திற்கான ஆட்சி, பண முதலைகள் வளங்கொழிக்கும் ஆட்சி. ஏற்கனவே தமிழகத்தில் பாதி, பன்னாட்டு நிறுவனங்களுக்கு அரசால் விற்கப்பட்டு விட்டது. நம் தாய் தமிழ்நாட்டை காப்பாற்ற விழித்தெழு தமிழா!. ஏற்கனவே எனது கட்டுரை ஒன்றில் மாற்றத்தை குறித்து எழுதியிருக்கிறேன்.

இனியும் காத்துக் கிடந்தோமானால் கடைசி வரை இலவசத்தின் பிடியில் இழிவான ஆட்சிக்கு அடிமையாய் வாழும் நிலை தொடரும். இந்நிலை மாற ஒவ்வொருவரும் வெகுண்டெழ வேண்டும். நம் மண்ணைக் காத்திட வேண்டும் கொடிய அரசியல்வாதிகளிடமிருந்து. தன்னலமற்ற மக்களுக்காக போராடும் தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டும். அறவழி போராட்டத்தை அராஜகமாக்கிய ஒவ்வொருவரும் தண்டிக்கப்பட வேண்டும். பதினோறு ஆன்மாக்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் நீதி கிடைத்திட வேண்டும்.

‘‘தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்
தர்மம் மறுபடியும் வெல்லும்...’’

## - மகாலெட்சுமி சிவானந்தம்

## ஓவியம்

**இ. யாழினி**
உள்ளிக்கோட்டை



# அச்சுறுத்தல், அபாண்டம், அபகரிப்பு


இராசசேகரன் மன்னை

தமிழர்நாடு இக்கட்டான காலக்கட்டத்தில் பயணிக்கத் தொடங்கி விட்டது. தொடர்ந்து இரண்டு வருடங்களாக தமிழர் நாடெங்கும் அனைத்து பகுதிகளும் போராட்டக்களமாகவே உள்ளது. அந்த அளவிற்கு, மக்கள் விரோத திட்டங்களை செயல்படுத்த இந்த வல்லாதிக்கங்கள் துடித்துக் கொண்டிருக்கின்றன.

காளையை மீட்க தமிழர் கடலாம் மெரினாவில் தமிழினமே திரண்டெழுந்து தன்னெழுச்சியாக களம் அமைத்தனர். அதன் வீரியம் தமிழர் நாடெங்கும் பரவி சல்லிகட்டிற்கு சிறப்பு சட்டம் இயற்றும் வரை இதன் தளங்கள் எங்கும் தடம் மாறவில்லை. உலகில் எந்த இடத்திலும் கோரிக்கையில் இருந்து கடுகளவு பிரளாமலும் அதே நேரத்தில் ஆண்கள், பெண்கள், குழந்தைகளோடு குடும்பமாகவும் தனி மனித ஒழுக்கம் தவறாத போராட்டமாக நடந்து உலகை வியக்கவைத்தது. அதே போன்று போராட்டத்தில் பங்கெடுக்க முடியாதவர்கள் தானாகவே முன்வந்து களத்தில் இருந்தவர்களுக்கான உணவு, சிற்றுண்டிகள், தேனீர் மற்றும் குளிர்பானங்கள் என்று கொடுத்து தங்கள் பங்களிப்பை செலுத்தினர்.

இளைஞர்களும் சிலம்பாட்டம், நடனம், நாடகம் மற்றும் பாடல் என்று போராட்டக் களத்தையே திருவிழாவாக கட்டமைத்தனர். இது அரசிற்கு பெரிய அழுத்தத்தைக் கொடுத்து கோரிக்கையை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தை உருவாக்கியது. அந்த அவசர சட்டத்தில் சில குறைபாடுகள் இருந்தாலும் இனத்தின் ஒற்றுமை அதனை பின்னாளில் சரிசெய்து கொள்ளும் நம்பிக்கையைக் கொடுத்தது.

அப்போராட்டத்தின் வெற்றி, மக்களுக்கு முழுமையாக சென்றுவிடக்கூடாது என்பதற்காகவே அரச பயங்கரவாதம் இறுதி நாளில் வன்முறைகளை கட்டவிழ்த்து போராட்டத்தில் சமூக விரோதிகள் புகுந்து விட்டார்கள் என்று கதைக்கட்ட முயற்சி செய்தது. ஆனால் காவலர்களே வாகனங்களுக்கு தீ வைக்கும் காட்சிகளும், குடியிருப்பு பகுதியில் தாக்கும் காட்சிகளும் சமூக வலைதளங்கள் மற்றும் ஊடகங்களில் வெளியாகி அவர்கள் முகத்திரையை கிழித்தது. ஆனால் அரசபயங்கரவாதத்தின் சமூகவிரோதிகள் என்ற விதை அன்று விதைக்கப்பட்டு விட்டது.

அதன் பிறகு நெடுவாசல் போராட்டம், ஊர் திருவிழாவைப் போன்றே முன்னெடுக்கப்பட்டது. கதிராமங்கலமும் நெருக்கடிக்கு மத்தியில் வீரியம் பெற்றது. காவிரிக்கான தொடர் போராட்டங்கள் அவர்களை கலக்கம் அடைய செய்தது. குறிப்பாக நெய்வேலி முற்றுகை, IPL மட்டைப்பந்து போட்டி எதிர்ப்பு போராட்டம், இந்திய

பிரதமரே வெளியேறு என்ற கருப்புக்கொடி போராட்டம் இவைகள் உலக பார்வையை தமிழர் மீது திருப்பியது. இந்நிலையில் தான் தூத்துக்குடி போராட்டம் வீரியம் பெற்று பெருந்திரள் போராட்டமாக உருவெடுத்ததை இவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

துப்பாக்கி சூடு நடத்தி போராட்டத்தை ஒடுக்க முயன்றார்கள் ஆனால் அவர்களால் அதுவும் முடியவில்லை. இறுதியில் அரசாணை வெளியிட்டு மக்கள் கோவத்தை தனித்துள்ள அதே நேரத்தில் முன்பு விதைத்த சமூகவிரோதிகள் என்ற விதையை இதன்மூலம் மரமாக வளர்த்து விட்டனர். அதுவும் அவர்களின் ஊடக பலத்தின் மூலம் கிளைப்பரப்பி வேர் வலிமையாகி கொண்டிருக்கிறது.

சமூகவிரோதிகள் என்ற விதையை வேண்டுமானால் இவர்கள் இன்று விதைத்து மரமாக்கி இருக்கலாம். போராட்டக்களங்கள், மக்கள் விழிப்புணர்வு, தன்னெழுச்சியான முன்னெடுப்பிற்கான விதைகள் விதைக்கப்பட்டு அவைகளும் வளர்ந்துவிட்டன. இனி மரம் (சமூகவிரோதிகள்) அமைதியாக இருந்தாலும் காற்று சும்மா இருக்காது. ஈழப்படுகொலை தமிழினத்தை தட்டியெழுப்பியது, உறக்கத்தை கலைத்தது. தமது அழிவு எங்கிருந்து தொடங்குகிறது என்பதை சிந்திக்க வைத்தது.

கூடங்குளம் போராட்டம் மக்கள் அறவழியில் அமைதியாகவும் போராட முடியும் என்ற நம்பிக்கையை கொடுத்தது. கெயில் போராட்டம் அரசின் பொருளாதார கொள்கை முடிவுகளை எதிர்த்து நீதிமன்றத்தில் வெல்ல முடியாது, மக்கள் திரள் போராட்டம் மட்டுமே தீர்வு என்ற படிப்பினையை கொடுத்தது. மீத்தேன் போராட்டம், மக்களிடம் கருத்துகளை கொண்டு சேர்த்துவிட்டால் மக்கள் போராட்டத்தை கையிலெடுத்து கொள்வார்கள் என்ற ஊக்கத்தை கொடுத்தது. அதன்பேரில் நான்கு வருடம் GEECL நிறுவனம் வேலையே தொடங்க முடியாமல் ஓடிப்போனது. இப்படி படிப்படியாக விதைக்கப்பட்ட விதைகளே தைப்புரட்சியில் காளையை மீட்க களமாக அமைந்தது. இன்று வரைத் தொடர்ந்து கொண்டும் இருக்கிறது.

தமிழினம் அழிவின் விளிம்பில் இருக்கிறது. தமிழர் நிலத்தின் அனைத்து பகுதிகளிலும் ஏதாவது ஒரு நிறுவனம், குத்தகைக்கு எடுத்து தமிழர் வளங்களை சுரண்ட தயாராகிறது. இவர்கள் குறிக்கோள் ஒன்று ஒரு குடும்பம் வளமாக இருக்க ஒருவர் தியாகம் செய்யலாம் தவறில்லை. ஒரு நாடு வளமாக இருக்க ஒரு மாநிலத்தை தியாகம் செய்யலாம் என்ற அடிப்படையிலேயே இவர்களின் பொருளாதார கொள்கை கட்டமைக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு ஒன்று மட்டும் புரிவதில்லை. மாட்டிடம் இருந்து பாலை கறந்து தான் எடுக்க வேண்டும், மடியை அறுத்து எடுத்தால் மாடும் இறந்துவிடும் பாலும் கிடைக்காது. இது புரியாமல் மடியை அறுத்து இரத்தம் குடிக்க துடிக்கிறார்கள்.

இந்த மண்ணில் இவ்வளவு கனிம வளங்கள் இருக்கிறதென்றால் இது எவ்வளவு

பழமையான மண்ணாக இருக்க வேண்டும். உலகிலேயே சுத்தமான நிலக்கரி இருக்கிறதென்றால் இது எத்தனை ஆயிரம் ஆண்டுகள் பண்பட்ட நிலமாக இருக்கவேண்டும். உலகிலேயே இரண்டாவது பெரிய சமவெளி காவிரிப்படுகை எனில் இதனை சமவெளியாக்க எவ்வளவு காலங்கள் பிடித்திருக்கும் எவ்வளவு மனித உழைப்பு அழிந்திருக்கும்.

இவைகள் தான் இந்த உலகநாடுகளின் கண்களை உறுத்துகின்றன இந்த பொருளாதார தேவை, இந்திய ஒன்றியத்திற்கும் தேவைப்படுகிறது. அனைத்தும் இணைந்து இன்று நமது தமிழர் நிலம் நவீன சுடுகாடாக கட்டமைக்கப்படுகிறது. பிறந்த குழந்தை கூட தனது தேவையை அழுது உணர்த்தினால் தான் அதன் பசியை அம்மாவிற்கு உணர்த்த முடியும். அதுபோன்றே தங்களின் எதிர்ப்புகளை சிறுப்போராட்டங்கள் மூலம் தான் வெளிப்படுத்த இயலும். அதுவும் தவறான பொருளாதார கொள்கையுள்ள நிலையில் அதனை மக்கள் அப்படியே ஏற்றுக்கொள்ள இயலாது.

இறையாண்மை என்பது மக்கள் ஓர் பகுதியில் இணைந்து வாழ்கின்றனர். அவர்களுக்கு ஓர் தலைமை உருவாகிறது அந்த தலைமை ஒரு அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்குகிறது அந்த அரசியலமைப்புச் சட்டம் மக்களை பாதுகாக்க இருக்க வேண்டுமே தவிர தங்களின் கொள்கை முடிவிற்கு தகுந்தாற்போல் போல மக்களை அச்சுறுத்தி ஒடுக்கி தனது நிலைப்பாட்டை செயல்படுத்த பயன்படக்கூடாது. அப்படி பயன்படுத்தப்படுகிறதெனில் அதுவே இறையான்மைக்கு நேரெதிரானது, அச்சூழலை உருவாக்குகிறவர்களே இச்சமூகத்தின் விரோதிகள்.

மேலும் இவர்களின் பொருளாதார கொள்கை, நமது சூழலுக்கு ஏற்பதாக இருந்தாலும் பரவாயில்லை, அதுவும் இல்லை. நமது தமிழர் நிலம் முழுவதும் விவசாயத்தையும் மீன்பிடி தொழிலாகவும் நெசவு தொழில் மூலமும் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதுவும் பணம் ஈட்டும் தொழிலாக இல்லை. அம்மக்களின் வாழ்வியலாகவே உள்ளது. எவ்வளவு தான் மக்களை அவர்கள் வாழ்வியலில் இருந்து அப்புறப்படுத்தி மழுங்கடித்தாலும் அவர்களின் மரபணு அத்தொழிலை சுற்றியே இருக்கும்.

மக்கள் இப்படி இருக்கும் போது இங்கே பொருளாதார கொள்கையும் இவைகளை மேம்படுத்தும் வகையில் தான் இருக்க வேண்டும் அதுவே இறையாண்மை, அதனை பாதுகாப்பதே அரசியலமைப்பு சட்டத்தின் வேலை. ஆனால் இங்கே நிலைமை இதற்கு எதிர்மாறாக கட்டமைக்கப்படுகிறது. பணத்தாசையில் பதவி மோகத்தில் சூழலியலைப் பாதுகாக்க பேசுகிறவர்கள் அனைவருமே சமூகவிரோதிகள் என்று தங்கள் அதிகாரத்தை கொண்டும் ஊடக வலிமையைக் கொண்டும் கட்டமைக்க முயல்கிறார்கள்.

ஆனால் இத்தமிழனம் இதுபோன்ற பல எதிர்ப்புகளையும் அச்சுறுத்தல்களையும் கடந்து தான் இன்றும் நிலைத்திருக்கிறோம். எமது வாழ்க்கை போரோடும் ஏரோடும் மட்டுமே கட்டமைக்கப்பட்டுள்ளது. இயல்பாக எங்கள் பொழுதுபோக்கு விளையாட்டுகள் கூட

ஒருவித பயிற்சிகளை உணர்த்துகின்றன. கபடி சுற்றிவளைத்தல் மற்றும் தற்காத்தல். பல்லாங்குழி இருப்பதை மற்றவர்களுக்கு கொடுத்தல், நம்மிடம் ஒன்றுமில்லை என்ற நிலை வரும் போது நமக்கு கிடைக்க வேண்டியது கிடைக்கும் என்ற நம்பிக்கையை விதைத்தல். சிலம்பம், சல்லிகட்டு என்று அனைத்திலும் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்து உளவியலாகவே உருவெடுத்துள்ளது.

இந்த உளவியல் எங்கள் மரபணுவிற்கு ஒவ்வாத எதையும் ஏற்காது, ஏற்றதுமில்லை. வரலாற்றில் அனைத்து கட்டங்களிலும் எதிரிகளையும் துரோகிகளையும் வீழ்த்தி தான் நாம் நம்மை தற்காத்துக் கொண்டுள்ளோம். அது சோழ பண்டியர் காலங்களாகட்டும், அதன்பின் வந்த மாற்றான் காலங்களாகட்டும் பல முயற்சிகளையும் வென்றெடுத்து இன்றளவிலும் நிலைத்து நிற்கிறோம்.

ஆங்கிலேய இந்திய என்று இணைப்பதற்கு முன்பே வெள்ளையனை வென்ற இனம் நமது தமிழினம். அதன் பிறகு சூழ்ச்சியில் வெள்ளையர்கள் ஆதிக்கம் நிலைத்தாலும் தன்னிலை மாறாது அவனை வலிமையாக எதிர்த்ததில் பெரும்பங்கு தமிழினத்திற்கு உண்டு. காந்தியின் அகிம்சை என்றாலும் சரி, பொதுவுடைமையின் புரட்சி என்றாலும் சரி, நேதாஜியின் படையணி என்றாலும் சரி அனைத்திலும் எமது பங்கு அதிகம்.

அதே போன்று சுதந்திர இந்தியாவின் முதல் மிகப்பெரிய போராட்டமான மொழிப்போராட்டத்திலும் தமிழினமே முன்னோடி. அதன்பிறகான விவசாய போராட்டங்களிலும் எமது கோரிக்கையில் வெல்ல அறவழியில் அனைத்து வழிகளிலும் களம் கண்டவர்களே தமிழினம். இடையில் வந்த ஆட்சியாளர்கள் நம்மை மழுங்கடித்து நமது வரலாறுகளை இருட்டடிப்பு செய்து நமது மரபணுக்களை சிதைக்க முயற்சி செய்தாலும் அதிலும் அவர்களால் வெல்ல முடியவில்லை, இனியும் அவர்களால் முடியாது.

ஆனால் இத்தனை காலங்கள் மொழி கலப்பு, இனக்கலப்பு என்று சிதைக்க முயன்றார்கள் நாம் நம்மை தற்காத்து கொண்டோம். ஆனால் இன்று அவர்கள் நிலப்பறிப்பில் இறங்கியுள்ளார்கள். இன்று அமைதியாக இருந்து நமது நிலத்தை இழந்தோமென்றால் இனி எப்போதும் நம்மால் நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியாது. எதை இழந்தாலும் நாமிருக்கும் வரை நம்மால் மீட்க இயலும். ஆனால் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்துவிட்டால் இந்த உலகில் நாம் வாழ்வதற்கு இடமில்லாத நிலை ஏற்பட்டு அகதியாகி அழியவேண்டிய நிலையே ஏற்படும். நமது முன்னோர்கள் பல தலைமுறைகளாக பாதுகாத்து கொடுத்த இந்நிலப்பரப்பை நமது சந்ததிகளுக்கு கொடுக்க வேண்டாமா?

கோடிகளாக சேர்த்து வைத்தாலும் பிள்ளைகள் வாழ்வதற்கு நல்ல காற்று வேண்டாமா? நல்ல குடிநீர் வேண்டாமா? நல்ல சுகாதார வாழ்க்கை வேண்டாமா? இதை அவர்களுக்கு பாதுகாத்து கொடுப்பது தானே நாம் அவர்களுக்கு சேர்க்க வேண்டிய

முதல் சொத்து. அதற்கு போராடி தானே ஆகவேண்டும். இன்றைய சூழ்ச்சியான பொருளாதார வலையில் போராடுவதென்பது கடினம் தான், இருந்தாலும் வேறுவழியே இல்லை. எதை இழந்தாலும் நாம் நம்மை தற்காத்துக் கொண்டுத் தான் ஆகவேண்டும்.

தமிழினத்தை அழிக்கின்ற சதிகள் இன்று, நேற்றல்ல. ஈராயிரம் ஆண்டுகளாக தொடர்கின்றது. அதிலும் சுதந்திர இந்தியாவின் மொழிவாரி மாநில பிரிப்பில் நமது நிலங்கள் ஏராளம். அதில் நமது நீர் பிடிப்புப் பகுதிகளை இழந்தோம், அதுதான் வஞ்சகத்தின் உச்சம். அதன் தொடர்ச்சியாக இன்றும் நமது பொருளாதார நிலை தாழ்ந்து நியாயமாக கிடைக்கக்கூடிய உரிமைகளுக்காகவும் போராடி கொண்டிருக்கிறோம். இத்தனை காலமாக போராடினாலும் நாம் எங்குமே அறவழி தவறியதில்லை, எவரையும் அச்சுறுத்தியதில்லை, எதிரிகளையும் துரோகிகளையும் அழித்து வாழவும் பழகவில்லை. நாம் நம் உயிர் இழந்து போராடி இருக்கிறோமே தவிர எவரையும் அழிக்க வேண்டும் என்று நினைத்ததில்லை இனியும் நினைக்கப்போவதில்லை.

இன்று தூத்துக்குடியில் துப்பாக்கி சூட்டிற்கு நம்மவர்களை இழந்த போது கூட நாம் எவரையும் அழிக்க நினைக்கவில்லை. ஆனால் இப்படியே காலத்திற்கும் நம்மால் நம்மை தற்காத்து கொள்ள மட்டுமே போராட முடியாது. இன்றைய நிலையில் நாம் சற்று அயர்ந்தாலும் அழிந்து விடுவோம். அதற்காக அணித்திரள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

நமக்கான தற்சார்பு பொருளாதாரத்தை முன்னிறுத்தி களம் அமைக்க வேண்டும். அனைத்து வேளாண் மண்டலங்களையும் பாதுகாக்கப்பட்ட மண்டலங்களாக அமைக்க தளம் அமைக்க வேண்டும். இந்த மண்ணையும் சூழலையும் மாசாக்காத இயற்கையோடு இணைந்த பொருளாதார சூழல் நமக்கு இருக்கிறது. அதனை செயல்படுத்த இந்த அரசுகள் திட்டங்கள் வகுக்காமல் இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் இச்சூழலை சிதைக்கும் எந்த திட்டத்திற்கும் அனுமதியில்லை என்பதை உலக அரங்கிற்கு தெரியப்படுத்த களம் அமைக்க வேண்டும். இக்களத்தில் ஒவ்வொருவரும் தங்களின் பங்களிப்பை செலுத்த வேண்டும். அதற்கு ஒவ்வொருவரும் மனதளவில் தயாராகவேண்டும். மற்றவர்களையும் தயார்படுத்த வேண்டும்.

அனைவரும் அனைத்தையும் பேச வேண்டும் அரசியலை விவாதிக்க வேண்டும். அரசியல் போசாதீர் என்ற வாசகத்தை அழித்துவிட்டு அரசியல் பழகுவோம் என்ற வாசகத்தை எழுத வேண்டும். அனைத்து விடயங்களையும் ஆலோசிக்க வேண்டும் அனைத்தையும் விவாதிக்க வேண்டும் ஒன்றே ஒன்று அனைத்து விவாதத்திலும் நமது நிலத்தின் பாதுகாப்பு, நமது இனத்தின் மீட்சி, நமது தற்சார்பு பொருளாதாரத்தின் மீட்டுருவாக்கம் அனைத்திலும் கவனமாக இருக்க வேண்டும். பேசுப்பொருள் மாற்றம் பெற வேண்டும்.

தமிழினத்தின் ஒற்றுமை மேம்பட வேண்டும் எதற்காகவும் நாம் நம்மை

இழந்துவிடக்கூடாது. நமது ஒரே பலம் மனித வளம், அதனை முறையாக பயன்படுத்த வேண்டும். எந்த மனித வளம் உலகநாடுகளை நம்மை நோக்கி நகர்த்துகிறதோ அந்த மனிதவளத்தை கொண்டே அவர்களை விரட்டியடிக்க வேண்டும்.

தமிழர் நிலத்தில் கனிம வளங்கள், இயற்கை வளங்கள் எவ்வளவு நிறைந்துள்ளதோ அதே அளவிற்கு மனிதவளமும் நிறைத்திருக்கிறது. இவர்கள் எப்படி இயற்கை வளங்களையும் கனிம வளங்களையும் அழித்து அபகரிக்க துடிக்கிறார்களோ அதே அளவிற்கு மனிதவளத்தையும் அழிக்க தயங்க மாட்டார்கள். அதன் சாட்சியம் தான் தூத்துக்குடி துப்பாக்கி சூடு.

இதன் மூலம் அதிகார வர்க்கம் நம்மை அச்சுறுத்தி அடக்கி ஒடுக்கிவிடலாம் என்று கருதுகிறது. அது நடக்காது என்று அவர்களுக்கு நிரூபிக்க வேண்டும். எந்த கனிமவளத்தை அபகரிக்க துடிக்கிறார்களோ அது அவர்களுக்கு கிடைக்கக்கூடாது. எந்த மண்ணை சிதைக்க முயல்கிறார்களோ அதனை செயல்படுத்த அனுமதிக்க இயலாது. எந்த மனிதவளத்தை நம்பி இவர்கள் தொழில் தொடங்குகிறார்களோ அது அவர்களுக்கு கிடைக்கக்கூடாது. அதாவது நமது சூழலுக்கு எதிரான திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனங்களில் நம்மவர்கள் வேலைச் செய்யக்கூடாது.

அவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வாகனங்கள் இயக்குவது, உணவு சமைத்து கொடுப்பது, அவர்களுக்கு தேவையான அடிப்படை உதவிகள் கூட அவர்களுக்கு கிடைக்கக்கூடாது. கடைகளில் பொருட்கள் கூட வழங்கக்கூடாது. அதையும் மீறி சிலர் அதீத பணத்தாசையில் இதனை செய்ய முயல்வார்கள். அவர்களையும் நாம் சமூக புறக்கணிப்பு செய்ய வேண்டும். எதுவுமே கிடைக்காத நிலையில் அவர்களால் எந்த பணியும் செய்ய இயலாது. அனைத்தையும் அவனது மண்ணிலிருந்து கொண்டு வரவும் இயலாது. அது அவனுக்கு மிகப்பெரிய பொருட்செலவை உருவாக்கும். ஒரு வியாபாரி இலாபத்தை அதிகரிக்க தான் ஆர்வம் காட்டுவானே தவிர திட்டத்தை செயல்படுத்த முனைப்பு காட்டமாட்டான். நாம் சரியான முறையில் இந்த அறவழி புறக்கணிப்பை செயல்படுத்தினால் எந்த நிறுவனமும் செயல்பட முன்வராது.

இதற்கு உறுதுணையாக அரசு அலுவலர்கள் மற்றும் தனியார் ஊழியர்கள் அனைவரும் வேலைநிறுத்தம் மேற்கொள்ள வேண்டும். மனிதன் அடிப்படை தேவையான உணவிற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து மற்றவைகளை புறந்தள்ள வேண்டும். அனைவரும் நம்மை மீட்டெடுப்பதைப் பற்றி மட்டுமே பேச வேண்டும். ஊடக பணியில் இருப்பவர்கள் மக்கள் நலன் சார்ந்த செய்திகளை மட்டுமே கொடுக்க வேண்டும். இதற்கு அந்த ஊடகம் தடையாக இருந்தால் அதனை தூக்கியெறியவும் தயங்கக்கூடாது.

அதையும் மீறி நமக்கெதிரான செய்திகள் வந்தால் மக்களாகிய நாம் அந்த ஊடகங்களை புறக்கணிக்க வேண்டும். காவல்துறையில் பணியாற்றுகிறவர்கள் சட்டத்தின் படியே

மக்களை காக்கின்ற பணியை மட்டுமே செய்யவேண்டும். மக்களில் தாங்களும் ஒருவர் நமது பிள்ளைகளும் இந்த மண்ணில் தான் வாழவேண்டும் என்பதையும் நடக்கின்ற போராட்டங்கள் தங்களின் பிள்ளைகளுக்கும் சேர்த்து தான் என்பதை அவர்களும் உணர வேண்டும்.

இவர்களை போன்றே அனைவரும் அவரவர் தளங்களில் இந்த மண்ணை மீட்கும் களத்தில் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும். எப்படி தனக்கான மாநிலத்தை உருவாக்க தெலுங்கான மக்கள் அனைத்து வகைகளிலும் போராடினார்களோ அதே போன்று வீரியமான போராட்டத்தை நாம் முன்னெடுக்க வேண்டும்.

நமது அனைத்து ஓட்டங்களும், வருமானங்களும், இந்த சிக்கல்களை எல்லாம் கடந்து செல்வதும் எல்லாம் நமது பிள்ளைகளின் எதிர்காலத்தை மனதில் வைத்தே. ஆனால் அவர்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகும் நிலையில் நாம் ஒதுங்கி இருக்க முடியாது. நமது பிள்ளைகள் மருத்துவமனையில் சாகக்கிடக்கும் போது நம்மால் இயல்பாக இருக்க முடியுமா? அப்படிப்பட்ட நிலை தான் தமிழர் நிலத்திற்கு ஏற்பட்டுள்ளது. எப்படி நமது பிள்ளையை காப்பாற்ற ஒவ்வொரு நொடியும் சிந்திப்போமோ அதேபோன்று தான் இந்த நிலத்தை காக்கவும் சிந்தித்தாக வேண்டும்.

கனிம வளங்களை சுரண்டி நமது இயற்கை சமச்சீரை சிதைக்க துடிப்பவர்கள் மண்ணை அழித்து நமது வாழ்வாதாரத்தை, தமிழர் தற்சார்பு பொருளாதாரத்தை அழிக்க முயல்கிறவர்கள், இறுதியில் எஞ்சி இருக்கும் மனித வளத்தையும் விற்க தயங்கமாட்டார்கள். நமது சிறுநீரகம், இதயம், கல்லீரல் போன்ற அனைத்து உறுப்புகளுக்கும் விற்பனை வரி செலுத்தும் நிலை வந்தாலும் வரலாம் இவர்களை பொறுத்தவரை அனைத்தும் பொருளாதாரம் பொருளாதாரம் மட்டுமே.

ஆபத்துகளை உணர்வோம் அணித்திரளுவோம்

**- இராசசேகரன் மன்னை**

# இமைக்கா நொடிகளில்



அஜய் பிரசாத் வாசுதேவன்

வெறுப்பின்
கால்பிடியில் மாட்டிக்கொள்ளும்
நாட்கள்

சிக்கித்தவித்து
தனிமையில் உறையும்
நிமிடங்கள்

எத்திசைச் சென்றும்
உபதேச மழையில் நனையும்
நொடிகள்

தாய், தகப்பனையும்
சினத்தால் தூக்கியெறியும்
பொழுதுகள்

இதயத்தின் துடிப்பு
குதிரை வேகத்திற்கு
உயரக் கூடும்

துள்ளிக்குதித்த கால்கள்
நடுக்கத்தில்
தளரக் கூடும்

சொற்களை அள்ளி வீசிய
வேளையில் சந்நியாச வாசம்
வீசக் கூடும்

நம்பிக்கையின் தூண்களைச்
சோதனைகள் தகர்க்கக் கூடும்

பூத்துக்குலுங்கும் நந்தவனத்தில்
சின்னஞ்சிறு காற்று வீசும்

மாயை ஆட்கொள்ளும்
புயலாக எண்ணம் விதைக்கும்

கண்ணீர் தெளித்து
விருட்சமாக்கி
ஆராதனை செய்யும்

வீழாதே நீ வீழ்ந்திடாதே,
மாயையில்
நீ வாழ்ந்திடாதே

வானில் சூரியனை மேகங்கள்
சில பொழுது ஆட்கொள்ளும்

அதனால் அவனை
திறனற்றவன் என்றுரைப்பவர்
மூடர்களே


வீறுகொண்டு காற்றின் கரத்தோடு
அவற்றை
களைந்தெறிந்திடுவோம் வா

வெளிச்சம் பார்
எங்கும் படரட்டும்,
நந்தவனம் புதுப்பிக்கட்டும்.

கரம் கோர்ப்போம் வா..
விடியலை தேடி..
மாற்றத்தை நோக்கி

மன்னார்குடி ரா. ராஜேஷ்

எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 4)






செண்பகவனத்தின் பாம்பணி ஆற்றங்கரை சாலையில் வந்தியதேவரும் அவரது பாதுகாப்பு வீரர்களும் குதிரையில் பயணித்துக் கொண்டிருக்கும் போது நடக்க இருந்த விச அம்பு தாக்குதலை மிக சாதுர்யமாய் மாணிக்கமும் அவன் நண்பன் கரியன் எனும் கரும்புலியும் தடுத்தனர். மாணிக்கம் செண்பகவனத்தின் மறவர்கள் தலைவரின் மகன், ஆதலால் எல்லா இடமும் அவனறிந்ததே. அதனால் வந்தியதேவரை மிக பாதுகாப்பாய் வனத்தை தாண்ட வைத்தவனை, விரைவில் அழைப்பு வரும் என்கிற குரல் மட்டும் எட்டியது..

கோட்டையை அடைந்த வந்தியதேவன் தன் காதல் மனைவியிடம் நேர்ந்தது அனைத்தோடு மாணிக்கத்தையும் கரியனோடு செண்பக வனத்தின் செழிப்பை பற்றியும் திருமேணியின் கடமையுணர்வின் மேன்மை பற்றியும் விவாதித்திருந்தனர்.

இதற்கிடையே தன்னை காண வந்த ஆழ்வார்கடியானை உபசரித்த மாணிக்கத்தை கரும்புகை புகட்டிவர கடத்திய குதிரை வீரர்களை அவர்கள் அறியாமல் பின்தொடர்ந்தான் ஆழ்வார்கடியான்...

கடத்திச் செல்லப்பட்ட மாணிக்கத்தை கண்டுபிடித்த கரியன், மாணிக்கத்தோடு சேர்ந்து எதிராளிகளை வீழ்த்தி ஆழ்வார்கடியானையும் காத்த. வீரம் கண்டு வியப்பெய்திய அடியானோ தப்பித்த இவர்களை மாணிக்கத்தின் வீட்டிலேயே மறைந்திருக்க சொல்லிவிட்டு சில காவலர்களை அழைக்க ஊருக்குள் விரைந்தான் ஆழ்வார்

இனி

மாணிக்கம் விறுவிறுப்பாய் செயல்பட்டான், வெறுமனே கனைத்து கொண்டு நின்ற குதிரையை அடித்து விரட்டினான். வீரனையும் மறைத்து தானும் மறைந்துக் கொண்டான்.

செண்பகவனத்தின் அழகிய குளங்களில்  ஒன்று, ஊர் நடுவில் இருந்தது. அதனருகில் இருந்த பெரிய அரசமரத்தடியில் தான் ஊர் பொது மேடை இருந்தது. ஊர்க்காவல் வீரர்கள் அங்கு கட்டாயமாய் இருப்பார்கள் என்ற எண்ணத்துடன் அங்கு வந்த ஆழ்வார்க்கடியாரை ஏமாற்றாத வண்ணம் நான்கு வீரர்கள் மேடையில் உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள்.

வேகமாய் வந்த குதிரையை கண்டு சற்றே பதட்டமாகிய அவர்களின் கைகள் உடைவாளையும் ஈட்டியும் இருக பிடித்தும், கண்கள் குதிரையை உற்றும் நோக்கியது.

அருகே வந்த குதிரையில் அமர்ந்திருப்பது அவர்கள் முன்பே அறிந்திருந்த ஆழ்வார்கடியார் என்றதும், புன்னகையுடன் வணங்கியவர்களுக்கு  பதில் வணக்கம் செய்த ஆழ்வாரின் முகத்தில் புன்னகை இல்லாமல் இறுகிப்போய் இருந்தது. வேகமாய் குதிரையிலிருந்து இறங்கியவர் அவர்களிடம் நீங்கள் எத்தனை பேர் இருக்கிறீர்கள்? இங்கு யாரிடம்  வேகமாய் ஓடும் வில்லு மாட்டு வண்டி உள்ளது? என்று படப்படத்தார்.

ஐயா ஏன் இந்த அவசரம் ? என்னவாயிற்று ?
என்றான் வீரர்களின் மூத்தவன்.

அனைத்தையும் போகும் வழியில் சொல்கிறேன். ஒரு கைதியை தஞ்சைக்கு அழைத்து செல்ல வேண்டும். எட்டு குதிரை வீரர்கள் துணைக்கு வேண்டும், வேகமாய் ஏற்பாடு செய்யுங்கள் என்று சற்றே  கோபமாய் சென்றார் ஆழ்வார். இதோ சற்று நேரத்தில் எல்லாம் தயாராகிவிடும் என்றான் மூத்த வீரன்.

நல்லது, நான் சொன்ன எல்லாவற்றையும் இந்த ஊர் முன்னாள் மறவர் தலைவன் சிவனேசன் வீட்டிற்கு வீட்டிற்கு வர சொல்லுங்கள்

நான் முன்னாள் போகிறேன்
என்று சொல்லிக்கொண்டே குதிரையிலேறி வேகமாய் விரட்டினார் வீட்டுக்கு.

வீடு வந்தவர் குதிரையைச் சற்றுத் தள்ளி நிறுத்திவிட்டு தோட்டத்திற்குள் நுழைந்தார். மாணிக்கம், மாணிக்கம்  என்று மெல்ல அழைத்துக்கொண்டே முன்னேறினார். சட்டென ஒரு கை, அவர் வாயைப் பொத்திக் கீழே இழுத்தது. ஐயா, இது நான் தான் மாணிக்கம்.

சற்று முன் ஒரு குதிரைவீரன் இந்த வீட்டைக் கடந்துச் சென்றான். போனவனிடம் விச அம்புகள் இல்லை. சாதாரண அம்பு குடுவையுடன் குதிரையிலிருந்து இறங்கி வேலிவரை வந்தவன், பின்பு ஏதோ நினைத்தவனாய் மீண்டும் குதிரையேறி சென்றுவிட்டான்.

ஆனால் இங்கு எங்கேனும் பதுங்கி இருக்க வாய்ப்புகள் அதிகம், என்ன செய்யலாம் என்றான் .சற்று பொறு, மாணிக்கம். ஊர் காவலாளியிடம், ஆட்களும் வில்வண்டியும் கேட்டுள்ளேன், பார்த்துக்கொள்ளலாம். சரி ஐயா, என்னிடமும் ஒரு யோசனை உள்ளது.மாட்டு வண்டியை நேராக மாட்டுக் கொட்டகைக்கு ஓட்டிவர சொல்லுங்கள். இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே குதிரைகள் வரும் சத்தம் கேட்டது, சற்று நேரத்தில் மாணிக்கத்தின் வீட்டின் முன் அனைவரும் வந்து சேர்ந்தார்கள் .

வேலியைப் பிரித்து விட்டு வண்டியை மாட்டு கொட்டகைக்கு உள்ளே கொண்டு வாருங்கள் என்றார் ஆழ்வார்க்கடியார்.

மாட்டு கொட்டகை இருட்டாக இருந்தது.

நிலவொளியும் கூட உள்செல்ல வாய்ப்பில்லை. எனவே உள்ளே நடப்பது வெளியிலிருந்து பார்க்க வாய்ப்பில்லை.

மாணிக்கம் இவன் தஞ்சை சென்றடையும் வரை அதாவது நாளை காலை வரை சுயநினைவு வரக்கூடாது.

அந்த மூங்கில் குடுவயை திறந்து அவன் மூக்கில் ஏற்று புகையை.. என்றார் ஆழ்வார்.

அதையும் அப்படியே செய்து முடித்தான் மாணிக்கம்.

இங்கிருந்து புறப்படும் வண்டி எந்த காரணத்திற்காகவும் இடைநிற்க கூடாது,நெடுவான்கோட்டை வழியாக தஞ்சை செல்லும் பெருவழி பாதையில் பயணியுங்கள்.

நிலவொளி சிறப்பாக உள்ளதால் வேறெந்த விளக்கையும் ஏற்ற வேண்டாம். மாட்டு வண்டிக்கு முன்னும் பின்னும் பாதுகாத்து செல்லுங்கள். நீங்கள் கோட்டையை அடைவதற்கு முன்னால், நாங்கள் உங்களுடன் கலந்து கொள்வோம். நினைவிருக்கட்டும், எந்த காரணத்திற்காகவும் வண்டி வழியில் நிற்க கூடாது என்று ஆழ்வார்க்கடியார் வீரர்களிடம் சொல்லி அனுப்பிவிட்டார். மாணிக்கம் வா, புறப்படு என்றார் ஆழ்வார்.

நான் வரவில்லை ஐயா, என்னால் கரியனை விட்டுப் பிரிய முடியாது. செண்பகவனத்தை விட்டு வருவதென்பதை என்னால் சிந்தனை கூட செய்ய முடியவில்லை. அது மட்டுமல்லாமல் நான் உங்களுடன் வந்தால், என் தாய் தந்தைக்கு யார் விளக்கேற்றுவார் என்று வாக்குவாதம் செய்துகொண்டிருந்த நேரத்தில், சற்றுமுன் நடந்த மாட்டுவண்டி மற்றும் குதிரை வீரர்கள் எழுப்பிய ஓசைகளால் ஏதோ விபரீதம்

நடந்ததாய் அந்த வீதியின் ஆட்கள் எல்லோரும் அவர்கள் முன் கூடிவிட்டனர்.

மாணிக்கத்தின் சின்னம்மாவும், சித்தப்பாவும் இதிலடக்கம். இன்றைய விசயம் தெரியாது என்றாலும் முந்தைய விபரீதம் அனைவருக்கும் தெரியும். அவர்களுக்கு அவன் ஆழ்வாருடன் செல்வதே சரியாய்பட்டது. அவனது எதிர்காலமும் சிறப்பாய் இருக்கும், தஞ்சைக்கு சென்றால்! என்று உணர்ந்து மாணிக்கத்தை வற்புறுத்தினர். சின்னம்மா மாணிக்கத்திடம், நான் இறக்கும் வரை உன் தந்தைக்கும் தாய்க்கும் விளக்கேற்றுகிறேன், இது என் வாக்கு.

நீ ஆழ்வாருடன் செல்வதே நல்லது என்றார்.

சுற்றத்தாரும் கூட்டத்தாரும் அதையே ஆமோதித்தனர்.
மாணிக்கம் இரண்டு கைகளையும் உயர்த்தி சரி, சரி கரியன் இல்லாமல் என்னால் செல்ல முடியாது. இடைமறித்த ஆழ்வார், கரியனை உன்னுடன் அழைத்து வரக்கூடாது என யார் கூறினார் என்றார்.

ஐயா இது பூனையல்ல, புலி. இவனை பார்ப்பவர்கள் எல்லாரும் பயப்படுவார்கள், தாக்கவருவார்கள் என்றான். சின்னதாய் சிரித்த ஆழ்வார், நாம் செல்வது தஞ்சைக்கு நமது சின்னமே புலி தானே. நாம் பயணிப்பதும் இரவில். அதனால் இவனை வழியில் யாரும் பார்க்க போவதுமில்லை, பயப்பட போவதுமில்லை. தஞ்சை அரண்மனையில் 30க்கும் மேற்பட்ட புலிகள் உள்ளன. எனவே நீ எதற்கும் பயப்படாதே, நான் இருக்கிறேன், வா போகலாம் என்றார் ஆழ்வார்.

சரி ஐயா, இதோ நொடியில் வருகிறேன் என்றவன் அரைமனதாகவே புறப்பட ஆயத்தமானான். ஒரு பெரிய துணியில் தந்தையின் ஒரு வேட்டியையும் தாயின் சேலையையும் அவனது சில துணிகளையும் இட்டு முடித்தான். சில மருந்துகளையும் திண்ணையிலிருந்து எடுத்து முடிந்துக் கொண்டு வெளியே வந்தவன்.

எனக்கு குதிரை இல்லையே என்றான். அவன் சித்தப்பா, அவரது குதிரையைக் கொண்டு வந்துக் கொடுத்தார்.

சித்தப்பாவையும், சின்னம்மாவையும் ஒன்றாய் நிற்க சொல்லி நெடுஞ்சான்கிடையாக காலில் விழுந்தான். மாணிக்கத்தை, அவர்கள் மட்டுமல்லாமல் அங்கு நின்றிருந்த பெரியவர்கள் எல்லோரும் வாழ்த்தினர்.

எடுத்து வந்த துணிமுடிப்பை குதிரையில் கட்டிவிட்டு குதிரையில் ஏறி கரியனை பார்த்தான். அதுவரை, ஒரு மூலையில் நின்றவன் மாணிக்கத்தின் குதிரையின் முன்னே போய் நின்றான். ஆழ்வாரும் குதிரையில் ஏறினார், மூவருமாய் அனைவரிடமும் விடைப்பெற்றுக் கொண்டனர்.

வண்டியும் மாடும் மிக தரமாய் இருந்தது,
குதிரையின் வேகத்திற்கு ஈடு கொடுத்து ஓடியது.

நாம் தாமதித்து வந்தது தவறாகிப்போனதோ என்று ஒரு கணம் யோசித்த ஆழ்வாரின் கண்ணில் மாட்டு வண்டியும் வீரர்களும் தென்பட்டனர்.

அதை கண்டவுடன் உற்சாகமானார்கள். மூவரும் வேகத்தை கூட்டி அவர்களுடன் இணைந்துக் கொண்டனர். சற்றுத் தூரம் சென்றதும் ஆழ்வார் மாணிக்கத்திடம், நீ இவர்களுடன் வா, வேகத்தை குறைத்து கொள்ளுங்கள். நான் முன்னே சென்று நீங்கள் கோட்டைக்குள் வர வழிவகை செய்துவிட்டு விரைவில் உங்களுடன் கலந்து கொள்கிறேன் என்று கூறியவாறே வேகமெடுத்து முன்னேறினார் ..

மாணிக்கத்தின் முதல் பயணம் அது..

**பயணம் தொடரும் ...**

---

# அணைக்காதீர்கள் அலைப்பேசியை

வெளியூரில் வேலைக்கு சென்ற
மகனின் நினைவோடு வாழும் தாய்
அழைப்பாள், சாப்பிட்டாயா மகனே என!
அணைக்காதீர்கள் அலைப்பேசியை

காதுக்கு தோடும் கையுக்கு வளையலும்
கேட்டனுப்பிய தங்கை ஏக்கத்தோடு
அழைப்பாள்!
அணைக்காதீர்கள் அலைப்பேசியை....

வெளிநாட்டில் வேலைச் செய்யும் தன்
கணவனோ தினமும் இரண்டுமுறை
பேசுவார், நாளை தன் மகனுக்கு
பிறந்தநாள் வேறு, இன்னும்
பேசவில்லையே என வேதனையோடு
அழைப்பாள் மனைவி!
அணைக்காதீர்கள் அலைப்பேசியை...

தான் வேலைக்கு போகவேண்டும்,
மோட்டார்வண்டியை எடுத்துக்கொண்டு
கடைவீதிக்கு சென்ற மகன் நேரம்
கடந்தும் வரவில்லையே என
பதட்டத்தோடு அழைப்பார் தந்தை!
அணைக்காதீர்கள் அலைப்பேசியை...

எந்த நிமிடத்தில் எதுவேண்டுமாயினும்
நடந்தேறும், எனவே எப்போதும்
அணைக்காதீர்கள் அலைப்பேசியை.....



மன்னை ரஞ்சித்

# தண்ணீர் பாதுகாப்பு



ஜவகர்
மன்னை

நீரின்றி அமையாது உலகு' என்றார் வள்ளுவர். உலகில் இன்னும் சில ஆண்டுகளில் தண்ணீருக்காகப் போர் நிகழும் என்று அவ்வப்போது  சொல்வதற்கு காரணம் நீர் சிக்கனம் இல்லை.

ஏன் இந்த பயம், உலகம் முழுவதும் நிலத்தடி நீர் மிகவும் வேகமாகக் குறைந்து வருகிறது. நிலத்தடி நீர் குறைவதால் பலவழிகளில் பாதிப்பு ஏற்படுகிறது. இந்த அளவுக்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட என்ன காரணம்? யாரைக் குற்றம் சொல்வது?

அரசையா? பன்னாட்டுத் தனியார் நிறுவனங்களையா? தனி மனிதனையா? யாரைச் சொன்னாலும் அவர்கள் மறுத்து இயற்கையைத் தான் குற்றம் சொல்வார்கள். இயற்கை என்ன குற்றம் செய்தது? வேண்டியவர், வேண்டாதவர் என மனிதர்களைப்போல இயற்கை பாரபட்சம் பார்ப்பதில்லை.

வெயிலோ, மழையோ, காற்றோ எதுவென்றாலும் இயற்கை எல்லோருக்கும் பொதுவாகவே அள்ளிக்கொடுக்கிறது. தண்டனை வழங்குவதாக இருந்தாலும் இயற்கை யார் எவர் என பேதம் பார்ப்பதில்லை.

முன்பு ஒருவர் வீடு கட்டினால் நல்ல காற்றோட்டமான இடமா, மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியா என்றுதான் முதலில் பார்ப்பார். வீட்டில் தண்ணீர் தேவைக்கு அடிபம்பு அமைத்துக் கொள்வோர் நூற்றில் 30 பேர்தான்.

ஆனால் இன்று வீடு கட்டுபவர்கள் நல்ல நிலத்தடி நீர் உள்ள இடமா எனப் பார்த்து நல்ல விளைச்சல் நிறைந்த விவசாய நிலத்தை வீடு கட்டத் தேர்ந்தெடுக்கின்றனர். அது மட்டுமா? வீட்டில் நீர் தேவைக்கு ஓர் ஆழ்குழாய்க் கிணற்றை அமைக்கின்றனர். மிகக் குறைந்த ஆழத்திலேயே தண்ணீர் வந்தாலும், கோடைக்காலத்தில் சிரமப்படக் கூடாது என எண்ணி நூறு மீட்டர் ஆழம்வரை ஆழ்குழாய்க் கிணறு அமைக்கின்றனர். அதில் ஒரு மோட்டாரை வைத்துத் தொட்டியில் தண்ணீரை நிரப்பி, வீட்டிலுள்ள ஒவ்வொரு அறையிலும் அமைக்கப்பட்டுள்ள குழாயில் சுகமாகத் தண்ணீரைத் திறந்துவிட்டு அனுபவிக்கின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன் ஊரில் ஓரளவு நல்ல வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வீடு கட்டினால், வீட்டின் பின்புறம் தங்கள் பயன்பாட்டிற்குச் சிறு கிணறு அமைத்துக் கொண்டனர். அதிலும் வாளியால் இறைத்துதான் தண்ணீரைப் பயன்படுத்தினர். தற்போது அதே கிணறுகளில் மோட்டாரைப் பொருத்தித் தண்ணீர்த் தொட்டியில் சேகரித்து நோகாமல் நீரைப் பயன்படுத்துகின்றனர். அந்த காலத்தில் ஒரு கிராமத்தில் 100 வீடு இருந்தால் அவற்றில் 30 வீட்டில்தான் ஆழ்குழாய் கிணறோ, சிறு கிணறோ

இருந்தது. தற்போது வீடு கட்டும் முன்னரே ஆழ்குழாய் கிணற்றைத்தான் அமைக்கிறார்கள். அதன் உதவியோடு தான் வீட்டைக் கட்டி முடிக்கின்றனர்.

தற்போது ஒரு தெருவில் 30வீடுகள் இருந்தால் 30 வீடுகளிலும் மோட்டார் இணைப்புடன் கூடிய ஆழ்குழாய் கிணறு உள்ளது. இவ்வாறு இருக்கும்போது நிலத்தடி நீர் எப்படிக் குறையாமல் இருக்கும்?

இது மட்டுமா தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் பல விவசாயிகள் ஆறுகள் கால்வாய்கள் போன்றவற்றிலிருந்து மோட்டார் மூலம் தண்ணீரை விவசாய நிலங்களுக்குப் பாய்ச்சுகின்றனர். இதனால் தண்ணீர் ஓட்டம் தடைப்பட்டு ஆறு மற்றும் கால்வாயில் நீர்மட்டம் குறைகிறது. இதனால் ஆறுகளில் அமைக்கப்பட்டுள்ள உறை கிணறுகளில் தண்ணீர் மட்டம் குறைந்து குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகிறது.

அதற்காக நீரைப் பயன்படுத்தாமல் இருக்க முடியுமா என்ற கேள்வி எழும். நீரைப் பயன்படுத்தாமல் உயிர்கள் வாழமுடியாது. தேவையில்லாமல் பயன்படுத்துவதை நிறுத்துவோம். நீரை இறைப்பதற்கு மோட்டார் பயன்பாட்டை குறைப்போம் வீடுகளில் ஆழ்துழாய்க் கிணறுகளில் மோட்டார் மூலம் தண்ணீர் இறைப்பதை நிறுத்தி வீடுகளில் இருக்கும் அடிபம்பு மூலம் தண்ணீரை இறைப்போம். இதனால் மின்சார தேவையும் குறைக்கமுடியும்.

நம் உழைப்பால் அடிபம்பில் தண்ணீர் அடித்துப் பயன்படுத்தினால் தண்ணீரை வீணாகச் செலவிட எண்ணம் வராது. அதனால் தண்ணீர் பயன்பாடும் குறையும். அண்மைக்காலமாக தண்ணீர் வசதி இல்லாத கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்படி பல ஆறுகளிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக ஒரு நீராதாரத்திலிருந்து ஒரு நாளைக்குப் பல லட்சக் கணக்கான லிட்டர் நீர் மோட்டாரால் உறிஞ்சப்பட்டு வழங்கப்படுகிறது. இதனால் வற்றாத நீர்நிலைகள் கூட வற்றும் நிலைக்குத் தள்ளப்படுகிறது.

நமது வருங்காலச் சந்ததி எப்பாடுப்பட்டால் நமக்கென்ன, நாம் இருந்து பார்க்கவா போகிறோம் என்ற எண்ணம் நமக்கு. இப்படி நமது முன்னோர் நினைத்திருந்தால் நாம் துன்பத்திற்கு ஆளாகியிருப்போம்.

மனிதர்களின் விருப்பம் பணம், புகழ் மட்டுமே உள்ளது. நமது சந்ததிக்குப் பணத்தைச் சேர்த்து வைத்தால் போதும் என்ற எண்ணமும் உள்ளது. பணத்தால் எல்லாவற்றையும் வாங்கலாம் ஆனால் விட்டுசென்ற இயற்கையை வாங்க முடியாது.
தண்ணீரை சேமிப்போம்!

**- ஜவகர் மன்னை**

# ஆல மூடு



ரா. ராஜராஜன்
மன்னார்குடி

ஏங்க பெரியவன தான் இந்த கவர்மெண்ட் ஸ்கூல்ல சேர்த்துவிட்டீங்க, சின்னவனையாச்சும் பக்கத்துல உள்ள பிரைவேட் ஸ்கூல்ல சேக்கலாம்ங்க. பாருங்க அங்க படிக்குற புள்ளைங்கல்லாம் எவ்ளோ அழகா டிரஸ் போட்டுட்டு தஸ்ஸு புஸ்ஸுன்னு இங்கிலீஷ்ல பேசுது. நம்ம பெருசும் என்ன பேசுது நீங்களே பாக்குறீங்கள. சின்னவனையாச்சும் பிரைவேட் ஸ்கூலுல சேர்த்துடலாம்ங்க.

ஏண்டி எல்லாம் இங்க படிச்சா போதும். படிக்குற புள்ளைக எங்க இருந்தாலும் பொழச்சிக்கும். அவனுங்க என்னடி சொல்லிகுடுக்குறாங்க, சிந்திக்க சொல்லிக்கொடுங்கடான்னா, எவனோ சிந்திச்சத சொல்லி கொடுக்குறானுங்க. அதெல்லாம் ஒன்னும் வேணாம். இங்கயே படிக்கட்டும்.

எய்யா ராசு நீ தான் படிக்காம உங்கப்பா மாதிரி கடலுக்கு போயிட்டு இருக்க, இவனாச்சும் நல்லா படிச்சு உன் தம்பி போல பெரிய உத்தியோகத்துக்கு போகட்டுமே, ஏன் அடம் புடிக்குற. புள்ளைக எதிர்காலத்தை பாரு. யம்மா நீ சும்மா இரு இந்த கடலு தான் எல்லாருக்கும் சோறு போடுது, 14 வயசுல அப்பன சுட்டுப்போட்டுட்டாங்கனு கடலுக்கு நான் போனதால தான் பாண்டியை  படிக்க வைக்க முடிஞ்சது. அவன் இப்ப அப்பா புண்ணியத்துல அவனுக்கு புடிச்ச மாதிரி இருக்கான்.

அவனை போல எதுக்கு நான் இருக்கணும், என் புள்ளைங்க இருக்கணும். எனக்கு இந்த கடல் நல்லது தான் பண்ணுது. எம் புள்ளைங்களும் கடலுக்கு போகுதுன்னாலும் போகட்டும் இல்ல தம்பி மாதிரி படிச்சி வேலைக்கு போகணும்னாலும் போகட்டும். அவங்க முடிவு, நாம பாதையை தான் சரி பண்ணி கொடுக்கணும். அந்த பிரைவேட் ஸ்கூலுக்கு அனுப்புனா இவனுங்கள புத்தகத்துல உள்ளது போல ஆக்கிடுவானுங்க. வேலைய பாருங்க நான் பார்த்துக்கிறேன்.

சரி நில்லுங்க சாப்பிட்டு போங்க. இல்லடி போராட்டத்துக்கு போயிட்டு வந்துடுறேன். அத்தை பாத்துட்டே இருக்கீங்களே, நீங்கனாச்சும் சொல்லுங்க சாப்டு போக சொல்லி. எய்யா ராசு பாதி நாளு, கடலுளேயே போயிடுது, மீதி நாளுன்னாச்சும் வீட்ல இருக்கலாம்ல, எதுக்கு கூட்டம் போராட்டம்னு போய்ட்டு இருக்க, அதுவா நமக்கு சோறு போடுது. எம்மா உனக்கு புரியாதுமா, விட்டா ஆலை காரணுவோ எல்லோரையும் கொன்னு பொதைச்சிட்டு போய்டுவானுங்க. சரிய்யா ஒரு வாய் சாப்பிட்டு போ, எவ்ளோ நேரம் ஆக போகுது. இல்லம்மா எல்லாம் வந்துருப்பாங்க வேகமா வந்துடுறேன்.

ஏம்மா பாக்கியம் ஒருபக்கம் கடலுக்கு போனா சுட்டு கொல்றாங்க இன்னொருபக்கம் வீட்டில இருந்தாலும் ஆலைக்காரன் கொன்னுப்புடுவான் போல. நல்லூத்து தண்ணியும் கெட்டுபோச்சுனா என்ன பண்றதுனே புரியல. அப்பறம் குடிக்கிறதுக்கு பழுப்பு தண்ணி தான். அத்தை, அப்படி ஆச்சுனா சின்னவருகூட மெட்ராசுக்கு போய்ட வேண்டியது தான். இங்க கெடந்து என்ன பண்றது. ஏண்டிம்மா உனக்கு என்ன, வாழ வந்தவ சட்டுனு ஊரைவிட்டு போய்டலாம்னு சொல்ற, நாங்க இங்க வாழறவங்க. அப்படி காலிபண்ணிட்டு போக முடியாதே. இந்த கடகரைல தான் காலம் காலமா வாழ்ந்துட்டு வரோம். இதைவிட்டுட்டு எங்குன போறது.

அத்தை சொல்ல மறந்துட்டேன், ரெண்டு நாளுக்கு முன்னாடி பாண்டி தம்பியும் அவங்கள்ட போன்ல பேசுறப்ப எதுக்கு இங்க கெடந்து கஷ்டப்படுறீங்க, மெட்ராஸுக்கு வந்துடுங்கனு சொன்னதுக்கு ''ஏண்டா நீ இருக்கணு நாங்க அங்க வந்துடலாம், மத்தவங்கள்லாம் எங்க போவாங்க, அதுவும் இல்லாம இது என் ஊரு நான் இங்க தான் இருப்பேன், அந்த கம்பெனியை மூடிட்டு தான் அடுத்த வேலைன்னு'' சொல்லி திட்டிப்புட்டாங்க. அவங்க அப்பன் அப்படி தான் கூட்டாளியை காப்பாத்துறேன்னு சிலோன்காரன் குண்டுக்கு செத்துப்போனார். இவன் என்னடானா ஊரை காப்புதுறேன்னு போயிட்டு இருக்கான். பாத்து அவனை சரிபண்ணிடும்மா பாக்கியம். அட ஏன் அத்தை நீங்க வேற அவங்க அப்படியே சொல்றத கேட்டுட்டாலும், அதை விடுங்க மதியம் என்ன சமைக்கிறது அதை சொல்லுங்க. சும்மா ரசம் வச்சி கருவாட பெரட்டிடு.

ஐ அம்மா அப்பா வந்துட்டங்கா. டேய் ஓடாதீங்க, மெதுவா போங்க. பாக்கியம் இந்தா இதை புள்ளைங்களுக்கு கொடு. ராசு மூஞ்ச கழுவிட்டு வா சாப்பிடலாம். பாக்கியம் ராசுக்கு சாப்பாடு போடு. கடலுல இருக்குறப்ப தான் நேரம் காலம் தெரியாத சாப்புடுற. இங்க வீட்லயும் அப்படியா. சாப்ட்டு தான் அந்த போராட்டத்துக்கு போறது. உன்ன யார் வேணாம்னு சொன்னா. யம்மா அதான் வந்துட்டேன்ல சோத்தை போடுங்க. ஏண்டா ராசு நாமலும் 3 மாசமா ஆலைக்கு எதிரா உட்கார்ந்துருக்கோம் ஒரு அதிகாரியும் என்ன ஏதுனு கேக்க மாட்டிங்குறானுங்களே.

என்ன தான்யா செய்றது. யம்மா அந்த ஆலை காரனுங்க எல்லாம் பெரு பணக்காரனுங்க. இவனுங்க தயவுல தான் ஆட்சியே நடக்குது. அதனால எதுவும் உடனே கிடைக்காது. லேட்டாகும். எவ்வளவு நாள் ஆனாலும் விடுறதா இல்லை. போராடிட்டே இருப்போம். வேற வழியில்லை. இல்லேனா எம்புள்ளங்க இங்க வாழ முடியாது. பரதேசியா வேற ஊருக்கு தான் போனும். நாம எதுக்குயா போகனும் இது நம்ம ஊரு, காலகாலமா இங்க தான் வாழ்ந்துட்டு இருக்கோம். அந்த ஆலைகாரனுங்க தான் நேத்து வந்தவுங்க. அவனுங்கள மூடிட்டு போக சொல்லு.

பெரியவனே அந்த செல் அடிக்குது பாரு எடுத்து கொடு. அப்பா! போலிஸ் மாமாப்பா. குடுடா இங்க. ஹலோ சொல்ட்றா குமரா. அண்ணே இன்னைக்கு ஆலைல விஷ வாயு

தொறக்குறதா செய்தி வந்தது, எல்லார்ட்டயும் சொல்லிடுங்க, நான் சொன்னதா சொல்லிடாதீங்க. நான் சொல்வனாடா உன்னை, நான் பார்த்துகிறேன், நீ இருட்றதுக்கு முன்னாடி வீடு வந்து சேரு. சரிண்ணே நான் வீட்டுக்கு போய்டுவேன் நீங்க எல்லார்ட்டயும் சொல்லிடுங்க. சரிடா.

எய்யா ராசு என்ன அவசரம் பாதி சாப்பாட்டுல எந்திரிக்கிறியே. யம்மா இன்னைக்கு ஆலைல விஷ வாயு தொறந்தூட போறாங்களாம். நான் போய் ஃபாதர்ட்ட சொல்லிட்டு வந்துடுறேன். நீ போய் அண்ணாச்சிட்ட செய்தியை சொல்லிடு, பாக்கியம் கொள்ள ஊட்டு முனிகிட்ட நீ சொல்லி எல்லார்ட்டயும் சொல்ல சொல்லிடு. சரிங்க நாங்க சொல்லிக்கிறோம், நீங்க தட்டுல உள்ளதை சாப்டு போங்க. அட நீ யாருடி அவசரம் புரியாம, ராத்திரி சேத்து சாப்பிட்டுகிறேன், நீ எடுத்து வை. வேணாம் மொதல்ல போய் சொல்லிட்டு வா, அப்பறம் எடுத்து வச்சிக்கலாம்.

வாப்பா ராசு எப்படி இருக்க , இங்க வந்து உக்காரு. பரவாயில்லை ஃபாதர். இன்னைக்கு ஆலைல விஷவாயு தொறக்க போறாங்களாம், அதான் உங்கள்ட்ட சொல்லிட்டு போலாம்னு வந்தேன். கத்தர் இன்னும் எவ்வளவு காலத்துக்கு நமக்கு இந்த கஷ்டத்தை கொடுப்பார்னு தெரியல.

யப்பா பீட்டர், கென்னடி  இங்க வாங்க, சர்ச் மணியை அடிச்சு எல்லார்ட்டயும் சேதி சொல்லிடுங்க, அப்படியே எல்லா தெருவுக்கும் போய் ஒவ்வொரு வீட்ல சொல்லிட்டு மத்தவங்களுக்கு சொல்ல சொல்லிடுங்க, வெளீல போயிருக்கவங்க எல்லாரையும் 7 மணி பஸ்ஸுக்கு முன்னாடி வந்துட சொல்லு. அப்படி யாரவது நாழியாகும்ன்னா எனக்கு தகவல் கொடு வேறு ஏற்பாடு பண்ணலாம். முத்துட்ட சொல்லி ஸ்கூல் வேனை எடுத்துட்டு பஸ் ஸ்டாப்க்கு போய் டவுன் பசுல்லேந்து வரவங்கள அழைச்சிட்டு வந்து ஊர்ல விட்டுட சொல்லு. மூச்சிரைப்பு மாத்திரை தேவைப்படுறவங்கள வாங்கி வச்சுக்க சொல்லிடுங்க. ஆளுங்கள அழைச்சிட்டு வரப்ப முத்துவ கொஞ்ச மாத்திரை வாங்கி அவனையும் வச்சுக்க சொல்லு. யாருக்காவது அவசரமான தேவைப்படும். சரிங்க ஃபாதர் நாங்க சொல்லிடுறோம்.

யப்பா ராசு நீ போற வழில குப்பத்துல இருக்குறவங்கள வந்து இன்னைக்கு சர்ச்சுல படுத்துக்க சொல்லிடு. கடலுக்கு போனவங்க யாராவது நைட் கரைக்கு திரும்புறாங்களானாலும் கேட்டுக்க, யாரும் இல்லனு தான் நினைக்கிறன் எதுக்கும் ஒரு வாட்டி கேட்டுக்க. சரிங்க ஃபாதர் நான் பார்த்துக்கிறேன். வரேன் ஃபாதர். நல்லதுப்பா யாரோ ஒருத்தர் உன் வழியா இந்த செய்தியை இங்குள்ள மக்களுக்கு சொல்றாங்க , ரெண்டு பேருக்கும் இந்த ஊரே நன்றி சொல்லுதய்யா. ஃபாதர் உங்க ஆசீர்வாதமே எங்களை நல்ல படியா வாழவைக்கும். நல்லது ராசு நீ கிளம்பு நாழியாகுது.

ஏண்டி கொல்ல வேலையெல்லாம் முடிச்சிட்டியா. 7 மணிக்கெல்லாம் எல்லாத்தயும் சாத்திடனும். யம்மா அண்ணாச்சிட்ட சொல்லிட்டியா. சொல்லிட்டேன் ராசு, நானும்

முனி அண்ணன்கிட்ட சொல்லிட்டேங்க. நல்லதுமா, நானும் குளிச்சிட்டு வரேன் சோறு போடுங்க நல்லா பசிக்குது. ஏன்டா கண்ணுங்களா அப்பா குளிச்சிட்டு வரேன் எல்லாம் சேர்ந்து சாப்பிடலாம். யப்பா நீ வாங்கியாந்த தீனியை இந்த சின்ன பயலே தின்னுபுட்டான்பா, எனக்கு கொடுக்கவே இல்லை. அப்படியா சரிடா விடு தம்பி தானே, நாளைக்கு நான் நெறையா வாங்கியாறேன்.

சரி நீங்க போய் குளிச்சிட்டுவாங்க காலைலேந்து ஒன்னும் சாப்பிடவேயில்ல. வந்து பேசிக்கலாம் உங்க மகன்களுக்கிட்ட. என்னடி உங்க மகன்களுனு அலட்சியமா சொல்ற. நீங்க ஒரு நாள் வீட்ல இருந்து பாருங்க இதுங்க பண்ற சேட்டை புரியும் உங்களுக்கு. உயிரை எடுக்குதுங்க. புள்ளைங்கனா அப்படி தான் இருக்கும். சரி சரி இரு நான் குளிச்சிட்டு வரேன்.

யம்மா வாயேன் நீயும் சாப்பிடேன். இல்லையா நீ சாப்பிடு நானும் பாக்கியமும் லேட்டா சாப்டுக்குறோம். ரெண்டு வாய் உள்ள போனாதான் கண்ணு பளிச்சுனு தெரியுது. கடல்ல சாப்பிடாம பல நாலு இருந்துருக்கேன் அப்பல்லாம் ஒன்னும் தெரியாது. இங்க நிலத்துல ஒருநாளு இருக்க முடியலையே. காத்து பூரா வெசம்மால்ல இருக்கு. இந்த ஆலைய மூடுனா தான் புள்ளைங்க இங்க வாழமுடியும். ஏன்டா எப்ப பாத்தாலும் அதே பேச்சா, விடுடா. பாண்டி போன் பண்ணுனானா, என்ன சொன்னான். ஆமாம்மா நான் சர்ச்ல இருக்கிறப்ப கூப்புட்டுருந்தான், நான் தான் அப்பறம் கூப்பிடுன்னு சொல்லி வச்சிட்டேன். பெரியவனே அந்த போன் எடுத்துட்டு வா, சித்தப்பாட்ட பேசுவோம்.

இந்தாடா இந்த போனை அங்க வய்யு. சித்தப்பா சித்தி தம்பிங்கல்லாம் இந்த வாரம் வராங்களாம். உங்களுக்கு நெறய விளையாட்டு சாமான் வாங்கிட்டு வராங்களாம்டா. பாக்கியம் அந்த ரூமை சுத்தம் பண்ணி வை. யம்மா பாத்துக்கோ. எனக்கு தெரியுமுடா, நீ போய் கொள்ள கதவுல இருக்குற ஓட்டைய அடை இல்லேனா ராவுல இன்னைக்கு இருக்க முடியாது. நம்மள அந்த ஆலை காரணுவோ மூச்சுவிடமுடியாமலே சாவடிச்சிடுவானுங்க. இறுமா இப்ப தானே சாப்பிட்டேன். 10 நிமிஷம் கழிச்சு போய் பாக்குறேன். டேய் வண்டி வந்து நிக்குது, யாருனு பாரு. அப்பா, போலீஸ் மாமா வந்துருக்குபா.

வாடா குமரா எப்படி இருக்க, அம்மாக்கு எப்படி இருக்கு உடம்பு பரவாயில்லையா. லதாவை ஆசுபத்திரிக்கு கூட்டிட்டு போனியா என்ன சொன்னாங்க. அம்மா அப்படியே தான்னே இருக்கு. ஆபரேஷன் பண்ணி கேன்சர் கட்டிய எடுக்கணும்னு டாக்டர் சொல்றாரு அம்மா தான் கேக்க மாட்டிங்குது. மாத்திரையை சாப்டுட்டு போய்டுறேன்னு, என்னால ஆசுபத்திரில கெடந்து அவதிப்பட முடியாதுனு சொல்லுது. என்ன பண்றதுனே தெரியல. லதாவுக்கு அப்படி தான் இருக்குன்னே, ஏற்கனவே 2 வாட்டி குழந்தை வயித்துல தங்காததால இந்த வாட்டி இன்னும் ஜாக்கிரதையா பாத்துக்க சொல்றாங்க. வீட்டு தண்ணிய அறவே தொட கூடாதுனு சொல்லிட்டாங்க . தெனம் காலையும் மாலையும் நல்லூத்து போய் தண்ணி புடிச்சிட்டு வந்துட்டு இருக்கேண்னே. தண்ணி தான் பிரச்சனைன்னு முன்னமே தெரிஞ்சிருந்தா அம்மாவும் இப்படி

ஆயிருக்காது, லதாவுக்கும் 2 வாட்டி கலைஞ்சிருக்காது.

ஏண்டா போலீஸ்ல தானே இருக்க இதெல்லாம் சொல்லி அந்த ஆலைய மூட வேண்டியது தானே. நீங்க வேறண்ணே அதெல்லாம் முடியாது. ஸ்டேஷன்க்கு நல்ல பணம் இறக்குறாங்க ஆலைக்காரங்க. எல்லோரும் காச வாங்கிட்டு தான் குடும்பத்தை வெளியூர்ல வச்சிருக்காங்க. எனக்கு தான் இது ஆகாதுன்னு கலெக்டர் பாதுகாப்புல டூட்டி மாத்திட்டு அங்க போயிட்டு இருக்கேன். ஆமாம்டா பாண்டி சொன்னான். ஆமாண்ணே அவன் இந்த வாரம் குடும்பத்தோட வரேன்னு சொல்லிருக்கான். உங்களுக்கு சொன்னானா. இப்ப தாண்ட பேசுனேன் சொன்னான்.

குமரா நீ இருக்குறதால தான் தெனம் நிம்மதியா தூங்க முடியுது. இல்லேன்னா இந்த ஆலைக்காரனுவோ எப்ப வெச வாயு தொறப்பானுங்கனு தெரியாம ராவுல தூக்கமே வராது. இந்த ஊரே உன்கிட்ட கடன்பட்டிருக்குடா. அட நீங்க வேறெ அண்ணே, என்னால முடிஞ்சது. நானும் ஏதோவகையில் இதுபோல் இந்த வேலை பயன்படுத்தேன்னு தான் பல்லைக்கடிச்சிட்டு போயிட்டு இருக்கேன், இல்லேனா எப்ப இவனுங்க ஆலைகிட்ட காசுவாங்குறானுவோன்னு தெரிஞ்சித்தோ அப்பவே வேலையைவிட்டு உன்கூட கடலுக்கு வந்துருப்பேன்.

பாண்டி தான் வேணாம் வேலை பாரு. ஆலைய மூடணும்னா எல்லா இடத்துலயும் ஆளு இருக்கணும்னு சொல்லி வேலைக்கு போவ சொன்னான். அவன் சொன்னதும் சரி தான், இன்னைக்கு வெச வாயு தொறக்குறது தெரியாமலே போய் இருக்கும். அதுவும் சரிதாண்டா. சரிண்ணே நான் கிளம்புறேன். நான் செய்தி சொன்னதா யாருக்கும் தெரிய வேணாம்ன்னே பாத்துக்கோங்க. யாருக்கும் தெரியாதுடா. நீ போ வீட்டுக்கு, அம்மாவும் லதாவும் தனியா இருப்பாங்க. சரிண்ணே நான் கிளம்புறேன்.

7 மணியாச்சு எல்லாம் கொல்லைக்கு போகணும்னா போயிட்டு வாங்க. பாக்கியம் பசங்கள போயிட்டு வர சொல்லு. ராசு எல்லாம் போயிட்டு வந்ததும் கதவு ஜன்னலெல்லாம் நல்லா சாத்திட்டு வா. சரிம்மா. யப்பா போனவாட்டி இதுபோல வெசம் தொறந்தப்ப நாம தானப்ப கதவெல்லாம் பொட்டிட்டு இருக்கோம். என் பிரண்ட் லோகு வீட்லலாம் ஏதும் பூட்டலயாம், எல்லாம் ராத்திரி வரையில் விளையாண்டுருக்கான்ப்பா. அதுவாடா அவங்க வீடு இந்த ஆலைக்கு தூரமா இருக்குல்ல அதனால தான்.

சரிப்பா வா, நாமளும் அங்க போயிடுவோம். இல்லடா இது தான் நம்ம வீடு இன்னும் கொஞ்ச நாளுல ஆலைய மூடிடுவாங்க அதுக்கப்புறம் நாமும் கதவெல்லாம் சாத்திட்டு இப்படி இருக்க தேவையில்லை. அப்பபடியாப்பா அப்படினா வேகமா ஆலைய மூடுங்க. சரிடா மூடிடலாம். வரும் ஞாயிறு 100வது நாள் போராட்டம் இருக்கு நீயும் வரியா, வந்தா ஆலைய மூடிடுவாங்களாப்பா. ஆமாம்டா எல்லோரும் சேர்ந்து போனா ஆலைய மூடிடுவாங்க. அபப்டினா நானு தம்பி அம்மா எல்லாம் வரோம். ஆத்தாவால நடக்க முடியாது அது இங்கயே வீட்ல இருக்கட்டும். ஏங்க நீங்க தான் போறீங்கனா ஏங்க

புள்ளைகளையும் அங்க கூப்பிடுறீங்க. சும்மா இருங்க. யப்பா போன் அடிக்குதுப்பா. இந்தா.

ஹலோ சொல்லு குணா, அண்ணே தங்கச்சுக்கு வயித்துவலி வந்துட்டனே திடீர்னு, அடுத்த வாரம் தான் தேதி சொன்னாங்க ஆனா இப்பவே ரொம்ப வலிக்குதுன்னு சொல்றா. கார்த்திப்பய சவாரிக்கு வெளியூர் போய்ட்டேண்ணே. முத்து அண்னண்ட்ட ஸ்கூல் வேனை எடுத்துட்டு வர சொல்லிருக்கேண்ணே. ஆனா சந்துக்குள்ள வேன் வரமுடியாதாம். ரோட்டுக்கு இவளை அழைச்சிட்டு வர சொல்றார். இவளால நடக்க முடியல நீ கொஞ்சம் வேகமா வீட்டுக்கு வாண்னே. தூக்கிட்டு போயிடுவோம். இருடா வரேன். அண்ணே மூக்கை துணியால கட்டிட்டு வா அவனுங்க வாயுவை தொறந்தூட்டுட்டானுங்க. நான் உன்ன கூப்பிட வெளில வந்து முடியாம தான் போன் அடிக்கிறேன். சரிடா நீ பானுவை பாத்துக்க. நான் வரேன். அம்மாவால ஆசுபத்திரிக்கு வரமுடியுமா இல்ல நான் பாக்கியத்தை அழைச்சிட்டு வந்துறவா. வேணாம்ணே அக்கரைல உள்ள சித்திட்ட சொல்லிட்டேன் அவங்க நேரா ஆசுபத்திரி வந்துடுவாங்க . நீ மட்டும் வேகமா வாண்னே. வைடா வைடா வரேன்.

யம்மா பானுக்கு வயித்துவலி வந்துட்டாம், நான் ஆசுபத்திரிக்கு அழைச்சிட்டுப் போறேன், நீங்க ஒழுங்கா கதவை சாத்திட்டு இருங்க. எதுனானா குணா செல்லுக்கு கூப்பிடு பாக்கியம், இந்த போனை வச்சுக்க. சரி இந்தாங்க துண்டு நல்லா மூக்குல கட்டிக்குங்க. இருங்க இருங்க சொட்டு மருந்தை எடுத்துக்கோங்க வேணுல ஏறுனதும் எல்லாம் கண்ணுல போட்டுக்கோங்க. வேகமா எடு. குடு குடு, சரி நான் வரேன். நல்லா கதவை சாத்திக்கோ.

வாப்பா ராசு, புள்ள துடிக்குறாயா. இரும்மா இரும்மா கவலைப்படாத. நான் பாத்துக்குறேன். குணா, முத்து வந்துட்டான்னு கேளு. யம்மா ரெண்டு போர்வை எடுமா. பானுக்கு முகத்துல மூடிக்குறா மாதிரி ஏதும் துணி எடு. அண்ணே, முத்துண்ண வந்துட்டாராம் ரோட்டுக்கு. சரி சரி அவரை அங்கேயே இருக்க சொல்லு. நாம தூக்கிட்டு போயிடுவோம். அந்த போர்வைய கொடுங்க. அம்மா இப்படி விரி.

ஆமாம் ரெண்டுத்தையும் சேர்த்து தான். குணா, பானுவை இதுல படுக்க வச்சி ரெண்டு பெரும் ரெண்டு பக்கம் புடிச்சு தூக்கிட்டு போயிடுவோம். பானு கொஞ்ச தூரம் தான் மூக்கை நல்லா பொத்திக்கோ, பல்ல கடிச்சுக்கோ வேனுல ஏறிட்டா, கதவை சாத்திட்டு ஆசுபத்திரிக்கு போய்டலாம். நானும் வரட்டுமாப்பா. மனசு ஒருமாதிரி இருக்கு. வேணாம்மா நீ இங்கயே இரு . நாங்க தூக்கிட்டு ஓடிடுவோம். உன்னால வேகமா வரமுடியாது. அண்ணே நீங்க புடிங்க நாம போவோம். டேய் மூக்குல துணிய கட்டுடா மொதல்ல. யம்மா நாங்க போனதும் நல்லா கதவை சாத்திக்கோங்க. காலைல வரோம். தூக்குடா.

முத்தண்ணே, கதவை தொற, ஏ பாத்துடா மெதுவா. அங்கேயே படுக்க வை. கதவை சாத்துங்க, நான் வண்டிய எடுக்குறேன். அவ்ளோ தான்மா போய்டலாம். அண்ணே

மூச்சு விடமுடிலன்னே, நெஞ்ச அடைக்குது. இவ்ளோ நேரம் மூக்கை பொத்துனது அப்படி இருக்கும். நல்ல இழுத்து மூச்ச விடுமா. குணா இந்த ட்ராப்ப பானு கண்ணுல விடு நீயும் போட்டுக்க. அண்ணே மூச்சு விட முடியலண்ணே. இரும்மா இரும்மா போய்டலாம். சீக்கிரம். முத்தண்ணே கொஞ்சம் வேகமா. குணா யார்ட்டயாவது சொல்லி ஆசுபத்திரில எல்லாம் ரெடி பண்ண சொல்லு. சித்தப்பாட்ட ஏற்கனவே சொல்லிட்டேண்ணே. அவர் அங்க தான் இருப்பார்.

பானு பானு, அண்ணே பானு மயங்கிட்டு, கொஞ்சம் வேகமா போங்க. வந்தாச்சு குணா, இன்னும் 10 நிமிசத்துல போய்டலாம். ஹலோ சித்தப்பா, நாங்க இன்னும் 10 நிமிசத்துல வந்துடுவோம், மூச்சு விட முடியாம பானு மயங்கிட்டு, டாக்ட்டர்ட்ட சொல்லி ரெடியா இருங்க சித்தப்பா. நீ வாப்பா டாக்டர் இங்க தான் இருக்காரு, நான் போய் சேதி சொல்லிடுறேன். மெதுவா மெதுவா ஸ்ட்ரெச்சர்ல வையுங்க. மெதுவா. உள்ள எடுத்துட்டு போங்க. எப்பப்பா மயக்கம் வந்துச்சு?, எவ்ளோ நேரம் ஆச்சு?. 10 நிமிஷம் டாக்டர். சரி நான் பாக்குறேன். வெயிட் பண்ணுங்க.

அண்ணே பயமா இருக்குன்னே. அதெல்லாம் ஒன்னும் இல்லடா குணா, கவலைபடாத. அதான் வந்துட்டோம்ல டாக்டர் பாத்துப்பார். நீ பானு மாப்பிளைக்கு போன் பண்ணி செய்தி சொல்லு மொதல்ல. சரிண்ணே. இதோ டாக்டர் வரார், சாரிப்பா வர வழியிலேயே மூச்சு உட முடியாம உயிர் போயிட்டு. குழந்தையும் கஷ்டம் தான். ஆப்பரேட் பண்ண போறேன், வந்து சொல்றேன். ஐயோ ஐயோ பானு இப்படி போய்ட்டியேடி, உனக்கு இப்படி நடக்கணுமா, ஒரு 10 நிமிஷம் பொறுத்திருக்க கூடாதா. இந்த ஆலைக்கு இன்னைக்கு என் பானு தான் பலியா.

அண்ணே, வாடா குமரா எங்க நேத்து பானு துக்கத்துக்கு வரல. இல்லண்ணே நேத்து ஒரு பழைய ஐஜி ஏதோ வேலையா இங்க வந்திருப்பார் போல. கலெக்டர் , எஸ் பி எல்லோர் கூடவும் அவருக்கு மீட்டிங். அவர் கூட டூட்டி போட்டுட்டாங்க , அதான் வர முடியல. என்னண்ணே இப்படி ஆகிட்டு, ரெண்டு பேரையும் காப்பாத்த முடியலையே. நான் தகவல் சொல்லியும் இப்படி ஆகிட்டே. ரொம்ப கஷ்டமாகிட்டுண்ணே. துக்கத்துக்கு போயிட்டு வந்ததுலேந்து வீட்லயும் லதா அழுதுட்டே இருக்குன்னே, அதுக்கும் இப்படி ஆகிடுமோ இங்க இருந்தானு பயப்படுது, சமாதானம் பண்ணிட்டு வந்துருக்கேன். வாரீங்களா குணா வீட்டுக்கு போயிட்டு வருவோம். வாடா போவோம், அவன் ஒடஞ்சி போய்ட்டான்.வாங்கண்ணே என் வண்டில போயிட்டு வந்துடலாம். சரிடா.

நல்லபடியா புள்ளை பெத்துட்டு போவோம்னு வந்த புள்ளைக்கு இப்படி ஆனதும் தாங்க முடியல. என்னென்ன பண்றது அந்த ஆலைய மூடியே ஆகணும். ஊர்ல எல்லாம் கொதிச்சு போயிருக்காங்க. குணா அந்த ஆலைய ஏதாவது செய்யணும்னு நேத்துலேந்து வெறி புடிச்சா மாதிரி நிக்குறான். இளவயசு பசங்களும் அவன்கூட சேர்ந்துக்குட்டு நிக்குறாங்க.

வர ஞாயிறு வேற கலெக்டர் ஆபீஸ் முற்றுகை இருக்கு. எல்லாம் அமைதியா இருங்க ஆலைய மூடிடலாம். அவசரப்பட்டு ஏதும் பண்ணி இவ்ளோ நாள் அமைதியா பண்ணுன போராட்டத்தை கெடுத்துடாதீங்கன்னு ஃபாதர் சத்தம் போட்டதும் தான் எல்லாம் அமைதியா இருக்குறானுவோ. பார்ப்போம். ஆலைய மூடாம கலெக்டர் ஆபீசை விட்டு வர்றதா இல்ல யாரும். துணிமணி சாப்பாடுனு எல்லாத்தயும் எடுத்துட்டு அங்க போய் உட்கார்ந்துடலாம்னு எல்லோரும் நேத்து பேசி முடிவாகிருக்கு. பார்ப்போம். ஆமாண்ணே ஆலைய மூடியே ஆகணும். என்னால ஆன உதவிய கண்டிப்பா செய்றேன். சரிடா

சனிக்கிழமை வீட்டுக்கு வந்துடு, பாண்டி வரான். சொன்னான்னே, நான் ரயில்வே ஸ்டேஷன் போய் அழைச்சிட்டு வந்துடுறேன். அப்படியா, சரிடா சரி அழைச்சிட்டு வந்துடு.

எய்யா ராசு, காலைல எத்தனை மணிக்கு பாண்டியை அழைக்க போகணும். இல்லம்மா குமரன் போய் அழைச்சிட்டு வரானாம். அவைங்க கூட்டாளி ரெண்டு பேரும் ஏற்கனவே பேசிக்கிட்டாய்ங்க. நேத்து தான் குமரன் சொன்னான். நானும் காலைல வெள்ளனா கரைக்கு போயிட்டு வந்துடுறேன், அகஸ்ட்டீன் கடலுக்கு போயிருக்கான், காலைல வருவான்.

சமையலுக்கு போய் ஏதாவது புடிச்சிட்டு வந்துடுறேன். நல்லதுய்யா இறாலும் சேர்த்து வாங்கிட்டு வா, குட்டிப்பைய விரும்பி சாப்பிடுவான். சரிம்மா நான் வாங்கியாறேன், நீ நல்லா ருசியா அதுகளுக்கு செஞ்சி போடு. ஆமாம்டா நான் ருசியா செஞ்சி போடாம தான் நீயெல்லாம் வளந்து நிக்குற. கடல்லேந்து வரப்பவே என்ன சமையல்னு மோப்பம் புடிச்சிட்டு வரவன் தானே நீ .போடா எனக்கு தெரியும்.

பாண்டி வாரியால போட்ல தீவு வரை போயிட்டு வருவோம். புள்ளைகளும் வீட்டுலயே இருக்குங்கள. நான் வரல ராசு நீ கூப்டுட்டு போயிட்டு வா. பசங்களா எல்லாம் போட்ல போலாம். கிளம்புங்க. யம்மா நான் போயிட்டு வந்துடுறேன் பாத்துக்க. சரிய்யா இருட்டுறதுக்குள்ள வந்துடு. சரிம்மா நாங்க கிளம்புறோம்.

எய்யா பாண்டி நீ வேணும்னா கொஞ்ச நேரம் போய் தூங்குய்யா. படுக்க தான் போறேனம்மா, ஒரு 5 மணிக்கா எழுப்பி விடுங்க. சரிய்யா நீ படு. அத்தை, ராத்திரி என்ன சமைக்கலாம். இரும்மா அவன் வேற தீவுக்கு போயிருக்கான், சும்மா இருக்க மாட்டான் ஏதாவது வாங்கியாந்துருவான், பார்த்துட்டு செஞ்சிக்கலாம். சரித்தை. போன் அடிக்குது பாரு. இவனுங்கல்லாம் ஆளுக்கு ஒரு போன் வாங்கி வச்சிக்கிட்டு நிம்மதியா தூங்க கூட முடியல பாரு. என்ன போனோ போ.

டேய் குமரா தூங்கிட்டு இருக்கேன்டா, சாயந்தரம் கூப்பிடுறேன். எலே பாண்டி எங்கடா அண்ணே. போன் அடிக்கிறேன் எடுக்க மாட்டிங்குது. இல்லடா புள்ளைங்கள அழைச்சிட்டு தீவு வரை போயிருக்கு டவர் இருக்காது. ஏண்டா ஏதாவது முக்கிய

செய்தியா. ஆமாடா நாளைக்கு இங்குன கலெக்டர் ஆபீஸ் முற்றுகை இருக்கு. அதுக்கு இவனுங்க போலீஸ் காரனுங்கள வச்சி ஏதோ பிளான் போடுறாங்கடா. நான் விசாரிச்சிட்டு வரேன். அண்ணன் வந்ததும் உடனே போன் அடி. சரிடா சரிடா, அது எப்படியும் 6 மணிக்குள்ள வந்துடும் நீ வா.

என்னய்யா தூங்கலையா போன் அடிச்சு எழுப்புட்டுட்டாங்களா. இல்லம்மா சும்மா தான் படுத்திருந்தேன். அவ தான் தூங்கிட்டு இருக்கா. அவ தான் இடி இடிச்சா கூட எழ மாட்டாளே, அவ கதையை எதுக்கு சொல்ற.

வாடா குமரா சீக்கிரம் வந்துட்ட. விஷயம் அப்படி, எங்க அண்ணே வந்துட்டா? இல்லடா வந்துடும் உக்காரு. பாண்டி, நாம வேணா கரைக்கு போவோமா. இல்லையா, அவன் இருட்டுறதுக்கு முன்னாடி வந்துடுவான். ரெண்டு பெரும் உக்காருங்க. ஏம்மா பாக்கியம் டீ போட்டு கொண்டுவாமா. இதோ வந்துட்டனே ராசு. எம்மா எல்லாருக்கும் சேர்த்து டீ போடு. புள்ளைங்களுக்கு பூஸ்ட் போடு.

அண்ணே, வாடா குமரா எப்ப வந்த. அண்ணே நாளைக்கு போராட்டத்தை வச்சிட்டு இன்னைக்குனு பார்த்து தீவுக்கு போய்ட்டீங்களே. மதியத்திலிருந்து உங்களுக்காக காத்துட்டு இருக்கேன். ஏண்டா என்ன விஷயம். ஏதாவது பிரச்சனையா. ஆமாண்ணே ஏதோ டெல்லி சென்னைலேந்து உத்தரவு வந்துருக்கு போல. பானு துக்கத்தன்னைக்கு ஒரு மீட்டிங் நடந்தது ஓய்வு ஐ ஜி ஒருத்தர் வந்தார்னு. அவர் இன்னும் ஊருக்கு போலென்னே, இங்க தான் இருக்கார்.

இன்னைக்கும் மீட்டிங் நடந்தது. கலெக்டர், எஸ்பி மத்த போலீஸ் அதிகாரிகள், நம்ம ஊரு ஸ்டேஷன் இன்ஸ்பெக்ட்டர் இன்னும் சிலர் வெளியூருலேந்து வந்திருந்தாங்க. இன்னைக்கும் அதே ரூம்ல மீட்டிங் நடந்தது. அந்த ரூம்ல தான் டெல்லிக்கோ சென்னைக்கோ பேசணும்னா  டைரக்ட் லைன் இருக்கும். முக்கியமான மீட்டிங்குனா தான் அங்க பேசுவாங்க. அன்னைக்கு நடந்தப்ப கூட எனக்கு ஒன்னும் தோணல, ஆனால் இன்னைக்கு திரும்ப எல்லாம் வந்து அதுவும் லோக்கல் இன்ஸ்பெக்ட்டர்ல்லாம் வந்ததும் தான் எனக்கு ஏதோ நடக்க போவுதுனு சந்தேகம் வந்தது.

சரி ஸ்டேஷன்க்கு போனா விவரம் தெரியும்னு நெனச்சிட்டு இருந்தப்ப தான் ஸ்டேஷன் பி சி இன்ஸ்பெக்டரை அழைக்க வந்தான். அவன்கிட்ட பேச்சு கொடுத்ததுல தான் சில விஷயம் புரிஞ்சது. இங்க போராட்டத்துள்ள முன்ன நிக்கிறவங்க விவரம் நம்ம ஸ்டேஷன்ல கேட்டுருக்காங்க, அதை எடுத்துட்டு தான் இன்ஸ்பெக்ட்டர் வந்துருக்கார்னு சொன்னான். அதே போல வெளியூர்லேந்து இன்னும் போலிஷ் போர்ஸ் வருதுன்னு சொன்னான். இதுக்கு மேல ஏதும் விவரம் தெரியலண்ணே.

அப்படியா நீ என்னடா குமரா நினைக்கிற. அண்ணே ஏதோ மேலிட உத்தரவு வந்துருக்கு, அதை செஞ்சி கொடுக்குறதுக்கு தான் ஓய்வு ஐ ஜி வந்திருக்கார். ஆக அன் அஃபிஷியலா  ஏதோ பண்ண போறாங்க. லிஸ்ட்ல உள்ளவங்கள குறிவச்சி பண்ண

போறாங்கன்னு நினைக்கிறேன். ஒன்னு ஏதோ கலவரம் மாதிரி நடக்க வச்சு அந்த லிஸ்ட்ல உள்ளவங்களை தாக்கலாம் இல்லேன்னா கைது பண்ணி எங்கோ கொண்டுபோய் வச்சு தாக்கலாம்னு நினைக்கிறேன்.

கலவரம் ஏற்படுத்திட்டா கண்ணு முன்னு தெரியாம நடந்துக்குவானுங்க, ஏற்கனவே 144 வாங்கி வச்சிருக்கானுங்க. ஆக நாம இதை யோசிச்சு சரியாய் பண்ணனும். இந்த போராட்டத்தை தள்ளிவைக்க வாய்ப்பிருக்காண்ணே? இல்லடா குமரா போராட்டம் ஆரம்பிக்குறப்பவே என்ன ஆனாலும் நடத்தணும்னு பேசி தான் தொடர்ந்து நடத்துறோம். அதுவும் இல்லமா எந்த பாதிப்பும் இல்லாம இவனுங்க எதிர்ல நம்மால போராட்டமே பண்ண முடியாது. சரி இரு மொதல்ல செய்தியை போய் ஃபாதர்ட்ட சொல்லிட்டு அவர் என்ன சொல்றார்னு கேட்டுட்டு வரேன். நீ கொஞ்ச நேரம் இருக்கியா இங்கவே. சரிண்ணே வேகமா போயிட்டு வாங்க. இருடா வந்துடுறேன்.

என்னண்ணே ஃபாதர் என்ன சொன்னார். அவர் முடிஞ்ச வரையில் செய்தியை முக்கியமானவர்களுக்கு சொல்லிடுறதாகவும் வேறு யாருக்கும் ஒன்னும் சொல்ல வேணாம்னும் சொன்னார். போலீஸ்காரனுங்க கலவரம் பண்றதுக்கு எல்லாம் பண்ணுவாங்க, எதுவும் நாம அத்துமீறாம செயல்படனும், நம்மள வழில எங்காவது தடுத்தாலும் மேற்கொண்டு போகாம அங்குனவே அமைதியா உட்கார்ந்துடணும்னு சொன்னார். அப்பறம் எல்லாம் சிறு சிறு குழுவா பிரிஞ்சு அவங்களுக்குள்ள பேசி ஒத்துமையா அமைதியா செயல்பட சொல்லிடுவோம்னு சொல்லிருக்கார்.

எக்காரணம் கொண்டும் எந்த கலவரத்தையும் நாம ஏற்படுத்தி அவங்களுக்கு வாய்ப்பு கொடுத்திட கூடாதுனு சொன்னார். கைது பண்ணுனா பண்ணட்டும், யாரும் எதிர்ப்பு தெரிவிக்காம ஏறி போய்டலாம் அங்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை. அவங்களால எல்லோரையும் கைது செய்ய முடியாது, முக்கியமானவங்கள தான் பண்ணுவாங்க, எல்லோரும் அமைதியா இவ்ளோ நாள் பண்ணுனா மாதிரி நாளைக்கும் பேரணி முற்றுகையை சரியா பண்ணிடணும்னு சொன்னாருடா.

சரிண்ணே, பாத்துக்கோங்க வேறு ஏதும் தகவல் கெடச்சா போன் பண்றேன். போன் கைலயே வச்சிக்கோங்க. நீங்க எனக்கு அடிக்காதீங்க. நான் என்னைக்குடா வேலை நேரத்துத்துல உன்னை கூப்பிட்டு இருக்கேன். வா, எதுவா இருந்தாலும் பாத்துக்கலாம். சரிண்ணே நான் கிளம்புறேன்.

பாண்டி வரட்டா. இருடா சேர்ந்து சாப்பிட்டு போலாம் . இல்லடா வீட்டுக்கு போறேன். நாளைக்கு ராத்திரி வரேன் இங்க சாப்பிட. அண்ணே எல்லாரையும் அழைச்சிட்டு பாண்டி இருக்குறப்பவே வீட்டுக்கு ஒரு நாள் வாங்கண்ணே சாப்பிட்டு வரலாம். சரிடா வா நாம நாளைய பேரணியை மொதல்ல பாப்போம்.

பாக்கியம் பேசிட்டே இருந்துட்டேன், அங்க திண்ணைல கனவா இருக்கு, அதை அபப்டியே பெரட்டிடு. இட்லி தோசை ஏதாவது ஊத்தி புள்ளைங்களுக்கு கொடு.

சரிங்க. வேகமா செய்யுங்க காலைல வெள்ளனே எந்திரிக்கணும் வேலை இருக்கு. இருங்க நான் போய் பசங்கள ஆட்களை சேதி சொல்லிட்டு வரேன். ஏன்யா நீ வீட்லயே தங்க மாட்டியா? எல்லாம் வந்துருக்காங்கள்ல. இரும்மா அர மணி நேரத்துல வந்துடுறேன். நீ சொன்ன கேக்கவா போறா. வேகமா வா.

எங்கம்மா, ராசை காணும். அவன் விடியுரத்துக்கு முன்னாடியே எழுந்து போய்ட்டான் பாண்டி, இன்னைக்கு ஏதும் நடக்காம நல்லபடியா பேரணி முடியனும், அந்த ஆலை மூடனும். சரிம்மா சாப்பாடு செய்ங்க குளிச்சிட்டு வரேன், நானும் பேரணிக்கு போயிட்டு வரேன். சரிய்யா நீ வண்டில போயிட்டு வந்துடு, மதியம் நாட்டுக்கோழி சமைக்கிறோம் சாப்பிட வந்துடு. ராசு கூட போய் நிக்காத, அவன் எல்லாத்தையும் முடிச்சிட்டு ராவுல தான் வருவான். சரிம்மா நான் சூசை கடைல வண்டிய போட்டுட்டு கொஞ்ச தூரம் போயிட்டு வந்துடுறேன். நல்லதுய்யா பாத்து போயிட்டு வேகமா வா.

ஆத்தா டிவிய போடேன், ஏண்டி இப்படி அலறுற. வா உக்காரு. ஆத்தா பேரணில ஏதோ பிரச்சனையாம், துப்பாக்கி சூடெல்லாம் நடந்துருக்காம். ஏ பாக்கியம் அந்த டிவிய வேகமா போடு. யம்மா நீ ராசுக்கும், பாண்டிக்கும் போன போட்டு என்னனு கேளு.

ஐயோ மாரியாத்தா ரெண்டு பேர சுட்டுட்டாங்களாம், அடக்கடவுளே. யம்மா என்னாச்சு போன் போட்டியா. மாமா போன் எடுக்கல அத்தை, பாண்டிக்கு போடுமா, இருங்க ரிங் போகுது. என்னங்க எங்க இருக்கீங்க. ஆஸ்பத்திரில இருக்கேண்டி, ஏன் என்னாச்சு. எனக்கு ஒண்ணுமில்லடி. இங்க ஒரே பிரச்சன்னை தடியடி. அடிபட்டவங்கள வண்டில வச்சி ஆசுபத்திரிக்கு நானும் சூசையும் தூக்கியாந்தோம்டி, நெறய பேரு அடிபட்டு இருக்காங்க, நான் வந்ததுலேந்து ஒவ்வொருத்தரையா வண்டில வச்சு தூக்கியாந்திட்டு இருக்கோம். நீங்க வாங்க வீட்டுக்கு, துப்பாக்கி சூடாம், ரெண்டு பெரு செத்துட்டாங்களாம். அப்படியா. இங்க தடியடி தாண்டி நடந்துருக்கு. முன்னாடி போன இடத்துல பிரச்சனை போல. ராசுக்கு பேசுனீங்களா. இல்லங்க அவங்க போன் எடுக்கல. சரி சரி நீ போன வை, நான் அடிச்சு பாக்குறேன். சரி, நீங்க வேகமா வாங்க மாமா வந்துடுவாங்க.

யம்மா இவனை வீட்டுக்கு வர சொல்லு, ராசு வந்துடுவான், இவனை அங்கெல்லாம் போக சொல்லாத. எங்கத்தை கேக்குறாங்க அவங்க போன வச்சிட்டாங்க. சரிம்மா, குமரனுக்கு அடி, எங்க இருக்கானு கேளு. சரித்தை. அண்ணே நான் தான் பேசுறேன். எங்கனே இருக்கீங்க. இல்லமா நான் ஊர்ல இல்லை. கலெக்டர் திடீர்னு பக்கத்தூரு கூட்டத்துக்கு வந்துட்டார், அவர்கூட வந்துட்டேன். எனக்கும் சேதி கெடச்சதுமா, ராசு அண்ணனுக்கு அடிச்சேன், அவர் போன் எடுக்கல. பாண்டி ஆசுபத்திரில இருக்கானாம். ஆமாம்ணே நானும் இப்ப தான் பேசுனேன். ராசு மாமா தான் போன் எடுக்கல.

நீங்க கவலைப்படாதீங்க, அண்ண வந்துடும். நானும் ஸ்டேஷன் ஆட்களுக்கெல்லாம் போன் அடிக்கிறேன், யாரும் எடுக்க மாட்டேங்குறாங்க. சரிண்ணே ஏதாவது செய்தி கெடச்சா கால் பண்ணுங்க. சரிம்மா நீங்க பதட்டப்படாதீங்க. அண்ணே வந்துடுவார். நான் கூப்பிடுறேன்.

எய்யா பாண்டி என்னய்யா சட்டையெல்லாம் ரெத்தம். ஒண்ணுமில்லமா எல்லோரையும் ஆசுபத்திரி தூக்கிட்டு போனேன்ல அதான். இதுக்குமேல அந்தப்பக்கம் போக விட மாட்டேங்குறாங்கம்மா, குமரன் வேற பிரச்னை பெருசா இருக்கு வீட்டுக்கு போனு சொல்லி போன் அடிச்சிட்டே இருந்தான், அதான் வந்துட்டேன். வர வழில கொடி கம்ப முக்குல திடீர்னு ஒரு துப்பாக்கி சத்தம் யாரை பாத்து சுட்டாங்கனு தெரில, என்ன பார்த்துனு தான் நினைக்கிறேன், நல்ல வேலை ஒன்னும் ஆகல. என்னாச்சு, ராசு பேசுனானா. போன் அடிச்சா போகல இப்ப. இல்லையா பேசல.10 பேருட்ட செத்து போய்ட்டாங்களாம். பாழா போனவங்க. நம்ம பக்கத்து ஆளுங்க யாரும் இல்ல. ஆனா இங்கேந்து போனவங்க இன்னும் யாரும் திரும்பலையாம்.

நம்ம முனி காலைல ராசுவை பாத்துருக்கான். ராசு, ஃபாதர் எல்லாம் தான் முன்னாடி பேரணில முன்னால போனாங்களாம். என்னாச்சுன்னு தெரில.  நீ வேணா சர்ச் வரை போய் பார்த்துட்டு வா. ஊரு பக்கம் போவாத. சர்ச்சு பக்கம் மட்டும் போ, யாரவது இருந்தா விசாரிச்சிட்டு வா. சரி, நீங்க யாரும் வெளில போவ வேண்டாம். இருங்க விசாரிச்சிட்டு வரேன்.

என்னய்யா யாராவது பாத்தியா. ஒவ்வொருத்தரும் ஒவ்வொன்னு சொல்றாங்க. ராசு பத்தி தெரில. ஃபாதர், பீட்டர், முத்து மூணுபேரையும் சுட்டுட்டாங்களாம், அடிபட்டு ஆஸ்பத்திரில இருக்காங்களாம். இன்னும் நெறய பேருக்கு அடிபட்டு வெளியூருக்கும் தூக்கிட்டு போயிருக்கங்களாம். ஐயோ இவன் எங்க போனானு தெரிலேயே. இவன் தான் எல்லாத்துக்கும் முன்னாடி போயிட்டு இருப்பானே. பாக்கியம் வேற அழுதுட்டே உட்காந்துருக்கா, உன் பொண்டாட்டி தான் பேசிட்டு இருக்கா. நான் வெளில வந்துட்டேன்.

இதோ இரு குமரன் போன் அடிக்கிறான். என்னடா வீட்டுக்கு வந்துட்டியா. நான் வந்துட்டேன். ராசு தான் இன்னும் வரல. நானும் போன் அடிச்சி பாத்தேன் யாரையும் புடிக்க முடியல. இன்னும் அர மணி நேரத்துல ஊருக்கு நான் வந்துடுவேன். வந்து நான் பார்த்துட்டு சொல்றேன். நீ வெளில எங்கும் போகாத. நான் வீட்டுக்கு வரேன். வந்து சொல்றேன் எல்லாத்தையும். எல்லாம் பிளான் பண்ணி நடந்துருக்கு. சரிடா. யம்மா அவனுக்கும் தெரியல. அரை மணி நேரத்துல வந்துடுவானாம். அவன் போய் பாக்குறேனு சொல்லிருக்கான்.

வாடா குமரா, என்னாச்சு ராசுவை பத்தி ஏதும் விஷயம் தெரிஞ்சிதா. இல்லடா. நம்ம ஊர்ல இல்லை. நான் முழுசா தேடிட்டேன். சிலரை அரெஸ்ட் பண்ணி வெளியூர் அழைச்சிட்டு போயிருக்காங்க. வேறவேற ஊரு ஆசுபத்திரிக்கும் நெறய பேர அழைச்சிட்டு போயிருக்காங்க. நான் எல்லா இடத்திலும் நம்ம ஸ்டேஷன் ஆளுங்கள்ட்ட சொல்லி விசாரிக்க சொல்லிருக்கேன். நையிட்டுகுள்ள கண்டுபிடிச்சிடலாம்.

இவனுங்க எல்லாம் பிளான் பண்ணி செஞ்சிருக்கானுங்கடா. போராட்டத்துக்குள்ளயே

போலீஸ் ஆளுங்க கலந்து தான் பிரச்சனை பண்ணிருக்காங்க. பல பெட்டாலியனை ஊருக்குள்ள எறக்கி , யூனிஃபார்ம் போடாம எல்லாம் பக்கா பிளான் பண்ணி செஞ்சிருக்கானுங்க. முக்கியமானவங்களாம் நோட் பண்ணி தான் சுட்டுருக்காங்க. அதுல தப்பிச்சவுங்களும் இருக்காங்க, சம்பந்தம் இல்லாம செத்தவங்களும் இருக்காங்க. இன்னும் வீடு வீடா போய் அரெஸ்ட் பண்ணிட்டு தான் இருக்காங்க. நான் இந்த போலிஸ் யூனிஃபார்ம்ல இருக்குறதால என்னால எங்க பாத்தாலும் போக முடியுது. மத்தபடி மக்கள் எல்லாம் வீட்ல அடங்கிட்டாங்க. வெளிலயே வர முடியல.

எங்க பாக்கியம், வாளியை எடுத்துட்டு கிளம்பிட்ட. இல்ல அத்தை அவங்க காலைலேந்து சாப்பிட்டுருக்க மாட்டாங்க, அதான் கொஞ்சம் நெத்திலி பொடி வாங்கியாந்து கொழம்பு வைக்கலாம்னு, விருப்பமா சாப்பிடுவாங்க. நீ இருமா, நான் வாங்கியாறேன். வேணாம்த்தை இருங்க நான் வாங்கியாறேன்.

அண்ணி பாத்து போங்க, இல்ல நான் வரட்டுமா. வேணாம் குமரா  ஊட்டுல உள்ள பொம்பளைங்கள என்ன பண்ண போவுது போலீசு, நான் வாங்கியாறேன். இந்த நல்ல பேர மட்டும் தான் நாங்க வாங்கிருக்கோம். என்ன வேலையோ. நீ ஏண்டா பொலம்புர, நீ போலீசா இருக்குறதால தான் நம்மால ஓரளவு பாதுகாப்பா இருக்க முடியுது, இல்லேன்னா இந்த ஆலை காரணுவோ நம்மள எப்பவோ கொன்னுருப்பனுவோ.

நீ என்ன நடந்தாலும் போலிஸ் வேலைய உட்டு வந்துடாத. நீ சொல்றதுக்காக தான் பாண்டி இந்த வேலைக்கு போயிட்டு இருக்கேன், ஏதோ ஒரு வகையில் உதவுது. ஏண்டா ஏதேதோ பேசிட்டு இருக்கீங்க, இவ என்னடானா புருசனுக்கு புடிச்சத சமைக்கிறேன்னு நெத்திலி வாங்க போறா, அந்த பைய எங்க இருக்கானே தெரில, நீங்க என்னடானா, ராசு எங்க இருக்கானு விசாரிங்கடா. மனசு கனமா இருக்கு.

குமரா ஏதோ வெளில சத்தம் கேக்குது பாரு, பாண்டி குண்டு சத்தம்டா.பாருங்கடா என்னனு, இவ வேற வெளில போனாலே.ஐயோ பாக்கியம் தலையையே காணோமே. படுபாவிகளா, மீன் வாங்க போனவளை இப்படி சுட்டுபுட்டீங்களே, அவ என்னடா பண்ணுனா. இப்ப தானே பொம்பளைய என்ன பண்ண போறாங்கன்னு சொன்னா, அவ கொரல் கூட காதுல கேட்டுட்டு இருக்கே, அதுக்குள்ளவாடா இப்படி பண்ணுவீங்க.எம் புள்ள வந்தா என்ன பதில் சொல்வேன்.

அம்மா! அம்மா!, டேய் பாண்டி புள்ளைங்கள புடிடா, அதுங்க இப்படி அவளை பாக்க வேணாம். குமரா அந்த வலைய கொண்டு மூடுடா. என் குடும்பத்துக்கு இப்படியா நடக்கணும். எம் புருஷன சிலோன் காரன் கடல்ல வச்சி சுட்டான், இவளை வீட்டு வாசலுக்கே வந்து சுட்டுப்புட்டாங்களே.  குண்டுக்கு சாவவா என்குடும்பம் நேந்து விட்டுருக்கு. எல்லோரும் நாசமா போய்டுவீங்கடா. உங்களுக்கெல்லாம் நல்ல சாவே வராது. கடலுக்கு போற ஆம்பளைக்கு தான் உயிருக்கு உறுதி கெடையாது, இப்ப அவன் வீட்டு பொம்பளைக்கும் உயிருக்கு பாதுகாப்பில்லையே. அந்த புயலும் சிலோன்காரனவிட இந்த போலீஸ் காரனுங்க மோசமானவங்களா?

பாண்டி வேலைய விட்டுட்டு கடலுக்கு போக ஆரம்பிச்சிட்டான். அந்த ஆலைய மூடமா விட கூடாதுனு உறுதியா இருக்கான். இன்னும் ராசுவ தேடிகிட்டு தான் இருக்காங்க எல்லாரும்.

அவங்களுக்கு தெரியாது ராசுவ தூக்கி கொண்டுபோய் போலீஸ் அடிச்சதுல மூளை கலங்குனதும், அதனால யாருக்கும் தெரியாம அவனைக் கொண்டு போய் கேரளாவுல போலீஸ் காரங்க இறக்கிவிட்டு வந்ததும், ராசு அங்க ரோட்டுல அலைஞ்சிட்டு இருக்குறதும். இப்ப ராசு சொல்லிட்டே இருக்குற ஒரே வார்த்தை ‘‘ஆல மூடு‘‘. அவனுக்கு சோறு போடுறவங்க அவனை கூப்பிடுற பேரும் ‘‘ ஆல மூடு‘‘ .

– **ரா.ராஜராஜன்,** மன்னார்குடி

---

# குறும்பு நல்லது !?

பள்ளி கோடை  விடுமுறை..
குழந்தைகள் வீட்டில் குதுகாலம்...!
வீடே விளையாட்டு களமானது..!
எங்கும் கூச்சல்..
எதிலும் சத்தம்..
நிறுத்தாத டி. வி..!
மூடாத பிரிட்ஜ்...!
சிதறிய பொருட்கள்..!
உடைக்கப்பட்ட சோபா..!
எப்போதும் கிரிக்கெட்..!
ஓயாத  சண்டைகள்..!
அப்பப்பா..

எப்போது திற்றக்குமே பள்ளிகள்..?
பள்ளி திறந்தது...!
வீடே நிசப்தம்..
எங்கும் வெறுமை.,.!
எத்தனையோ இழந்த சோகம்...!

மதியத்திலிருந்தே
சாப்பிடாமல் –
வாசலில் அமர்ந்து பள்ளிப்
பேருந்தையே
பார்த்துக்கொண்டிருக்கிறேன்..
இனம் புரியா கவலையோடு..!?



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி

# PLAYSCHOOLம் மருத்துவமனையும்



செந்தில்குமரன்
மன்னார்குடி

எப்படி தாத்தா, உன் கையெழுத்து இந்த வயசுலயும் இவ்வளவு அழகா இருக்கு? அதுவும் முத பக்கத்துல ஆரம்பிச்சு கடைசி வரைக்கும் ஒரே மாதிரி எழுதியிருக்க என்று ஆச்சரியத்துடன் கேட்டான் பத்து வயது பிரகலாதன்.

உங்கப்பன் உன்ன மூனு வயசுலேயே நல்லா பேசுற, ஓடுறனு சொல்லி பள்ளிக்கூடத்துல கொண்டு போய் சேர்த்துவுட்டான், அப்புறம் எப்படி தங்கம் உனக்கு கையெழுத்து அழகா வரும்?

என்ன தாத்தா இப்படி சொல்றீங்க, நானு இரட்டை வரி நோட்டு, நாலு கோடு நோட்டுனு எழுத்து அழகா வரதுக்கு டெய்லி பிராக்டிஸ் பண்றேன். வேண்ணா பாருங்க, ரெண்டு மாசத்துல கையெழுத்து உங்க எழுத்த விட நல்லா வரும்னு நகர்ந்தான்.

ஏன் மாமா, உங்க பையனை குறை சொல்லலனா, உங்களக்கு தூக்கமே வராதானு பிரகலாதனின் அம்மா சீதா கேட்க, தாத்தா அமைதியானார். சில மணித்துளிகளில், ஏன் மாமா மூனு வயசுல பள்ளிக்கூடத்துல சேர்த்ததுக்கும் இவன் கையெழுத்துக்கும் என்ன மாமா சம்மந்தம்?

எங்க காலத்துல எல்லாம் எட்டு வயசுக்கு மேல தான் கையில சிலேட்டுக் குச்சியைக் கொடுத்து எழுத சொல்லுவாங்க, அந்த எட்டு வயசு வரைக்கும் எங்க கை விரல் நரம்புகள் எல்லா விதமான கோணங்களிலும் பழக்கப்பட்டிருக்கும். தெளிவா சொல்லப் போனால் எங்களால தரையில் கிடக்கும் தையல் ஊசியின் வால் பகுதியைப் பிடித்து தூக்க முடியும். அந்த மெல்லிய நுனிப்பகுதியைப் பிடித்துத் தூக்கும் அளவிற்கு விரல்கள் பழகி இருக்கும்.

அதன் பிறகு தான் எழுதவே ஆரம்பிப்போம். இப்ப என்னடான்னா, புள்ள, பால் குடிக்கிறத நிறுத்துனதும் ஸ்கூல்ல சேர்த்து விட்டுட்டு கையெழுத்து வரல, கால் எழுத்து வரலன்னு தலைகீழா குதிக்க வேண்டியது.

இவ்வளவு இருக்கா மாமா இதுல, இதெல்லாம் ஏன் அப்பவே நீங்க சொல்லல? என சீதா கேட்டதும், நா சொன்னத யாரு காது கொடுத்து கேட்டிங்க என நொந்துக் கொண்டார் தாத்தா.

உன்னைச் சொல்லி குற்றமில்லை, என்னைச் சொல்லி குற்றமில்லை என்று கைப்பேசி அழைத்த உடன் ஓடோடி வந்து எடுத்த சீதா, சொல்லுங்கங்க என்றாள். நம்ம பையனுக்கு கையெழுத்து நல்லா வரலன்ற பிரச்சனை சம்பந்தமா டாக்டர் கிட்ட பேசுனேன்டி, எதாவது நரம்பு பிரச்சனையா இருக்கும்னு சொன்னாரு. ஆறு மணிக்கு அப்பாயின்மெண்ட் வாங்கி இருக்கேன், கிளம்பி ரெடியாயிரு, பார்த்துட்டு வந்துடுவோம் என்றார் சீதாவின் கணவர்.

தாத்தாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டே, சரிங்க என்ற சீதா, நல்லவேள மாமா பேச்சைக் கேட்டு நம்ம பையனுக்கு நடவண்டி வாங்கி கொடுத்தோம். நா சொல்ற மாதிரி. வாங்கி இருந்தா இவனுக்கு நடக்க வரலன்னு தான் டாக்டரு கிட்ட போயிருக்கனும்னு இணைப்பைத் துண்டித்தாள்.

சற்றே புன்முறுவலுடன் எழுந்து நடக்க ஆரம்பித்த 91 வயது தாத்தா, மடியிலிருந்து கீழே விழுந்த புத்தகத்தை அசதி பாராமல் குனிந்தெடுத்தார். பின்ன என்ன சார், ஐந்தில் வளையாததா ஐம்பதில் வளையும்? ஒரே குழந்தை, நாலு வருசம் கழிச்சு பிறந்த குழந்தை, ப்ரீசியஸ் பேபினு அந்த குழந்தையை அது போக்குக்கு கால் கை நீட்டி விளையாடா விடாம, இடுப்புல தூக்கி வச்சிக்கிட்டும், வீல் சேர்ல வச்சி தள்ளிக்கிட்டும், ஒன்னுக்கு கூட போக வழியில்லாத ஸ்கூல்ல சேர்த்து விட்டு, போதாக்குறைக்கு பாஸ்ட் புட் உணவுப்பொருள்களையும் திணிச்சு, பத்து வயசிலேயே பத்தாயிரம் நோய் செல்களை உருவாக்கி விட்டுட்டு, முழிச்சிட்டு இருந்தா ஒன்னும் பண்ண முடியாது.

## - இரா. செந்தில் குமரன்

மன்னார்குடி

# மட்டைப்பந்தாட்டமும் மனித வாழ்க்கையும்



மணிபாரதி தங்க சுந்தர்

‘‘வாழ்க்கை அவ்வளவு விளையாட்டா போச்சா‘‘, இது நாம் எவ்வித பொறுப்புகளும் இல்லாமல் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய சிந்தனை இல்லாமல் வெறுமனே சுற்றி திரியும் நேரத்தில் நம் பெற்றோர்களோ அல்லது நம்மை சுற்றி உள்ளவர்கள் சொல்லி கேட்டிருப்போம். ஆம், உண்மை தான் வாழ்க்கை என்பதே முடிவு தெரியாத ஒரு விளையாட்டு தான். இன்பம், துன்பம், அன்பு, பிரிவு, எதிர்ப்பு, ஏமாற்றம், துரோகம் என விடை தெரியாத விடயங்கள் அதில் உண்டு. அப்படிப்பட்ட விளையாட்டான வாழ்க்கையை ஒரு விளையாட்டு உடன் ஒப்பீட்டு பார்த்தால் எப்படி இருக்கும் என்பதை பார்ப்போம். எனக்கு பிடித்த சொற்பொழிவாளர் திரு.சுகிசிவம் எழுதிய புத்தகத்தில் இருந்து சில கருத்துக்களையும் என் எண்ணங்களையும் இணைத்து உங்கள் முன் பகிர்கிறேன்.

மட்டைப்பந்தாட்டம் (கிரிக்கெட்) நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. சிறுவயதில் அனைவரும் விளையாடி இருப்போம். அந்த விளையாட்டு உடன் தான் நம் வாழ்க்கையை ஒப்பீட்டு பார்க்க போகிறோம். மட்டைப்பந்தாட்ட மைதானத்தில் மட்டை வீச்சாளராக (batsman) ஒருவன் முதலில் களமிறங்குவான், அவனை எதிர்த்து பந்துவீச்சாளர் ஒருவன் வருவான். பந்துவீச்சாளரின் நோக்கம் மட்டை வீச்சாளரை வீழ்த்துவது. இதுவரை ஒருவருக்கு ஒருவர் எதிர்த்து போட்டியிடுவது சரியான ஒன்று. ஆனால் தடுப்பாளர்கள் என்று பத்து பேர் நம் ஓட்டங்களை தடுக்க இருப்பான்.

இதை சற்று கவனித்து ஒப்பீட்டு பார்த்தால் வாழ்க்கை எனும் மைதானத்தில் ஒருவன் தன் வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என நினைத்து இலக்கை தொடங்கினால் அதை தடுக்க குறைந்தபட்சம் பத்து பேராவது எதிர்த்து நிற்பான். இதைத் தாண்டி தான் நாம் வாழ்ந்து காட்ட வேண்டும். அதுபோல இப்போட்டியை காண பத்தாயிரம் பேர் வந்திருப்பான். அவன் தோற்றாலும் கத்துவான், வெற்றி பெற்றாலும் கத்துவான். அவனிற்கு கத்தவேண்டும், அது மட்டும் தான் தெரியும்.

இந்த ரசிகர்களை போல் தான் நம்மை சுற்றியும் பலர் காத்துகொண்டு இருப்பார்கள். நம்மை விமர்சனம் செய்ய தருணம் தேடி காத்துக் கொண்டிருக்கிறது ஒரு கூட்டம். இதற்கு அருமையான பழைய பாடல் வரிகள் உண்டு. வாழ்ந்தாலும் பேசும், தாழ்ந்தாலும் ஏசும் வையகம் இது தானடா! அவன் நோக்கம் நம்மை குறை கூறுவது மட்டுமே. இதை கடப்பது தான் உண்மையான வெற்றி. மாவீரன் அலெக்சாண்டரிடம் ஒருவர் ‘‘உலகளவில் வெற்றியை பெற்றவர் நீங்கள், உங்களை பொறுத்தவரை எது உண்மையான வெற்றி‘‘ என கேட்கிறார்.

அலெக்சாண்டரின் பதில் ‘‘எந்தவொரு இடத்தில் நீ அவமானப்படுத்தபட்டு, வெறுக்கபட்டு, ஒதுக்கி வைக்கப்பட்டாயோ அதே இடத்தில் அசைக்க முடியாத சக்தியாக மாறி நிற்பதே உண்மையான வெற்றி’’ என்கிறார். நிராகரிப்பு தான் நம் வாழ்க்கையை சரிவர பராமரிக்க உதவும். இந்த பார்வையாளர்கள் சில சமயங்களில் அவுட் ஆகாத நேரத்தில் அவுட் என ஆர்ப்பரித்து கத்துவான். அந்நிலையில் மட்டைவீச்சாளருக்கு இது அவுட் இல்லை என தெரிந்தும் இவர்களின் சத்தத்தை கேட்டு ஒருவேளை நாம் வீழ்ந்து விட்டோமோ என கவலையுடன் ஆடுகளத்தில் நிற்பான்.

ஆனால் நம்பிக்கையான நடுவர் ஒருவர் இது அவுட் இல்லை என்றவுடன் அத்தனை கூட்டமும் அடங்கி போய் உட்கார்ந்து விடும். இதை சற்று ஆழமாக சிந்தித்துப் பார்த்தால் பார்வையாளர்களின் எண்ணிக்கை என்பது அதிகம். ஆனால் அத்தனை பேரின் சத்தம் நடுவர் என்ற ஒற்றை இலக்க எண்ணிக்கையின் முன் தோற்று அடிபணிந்து உட்கார்ந்து விடுகிறது.

நம் வாழ்கையில் நம்மை வீழ்த்த துரோகம், ஏமாற்றம், தோல்வி என பல விடயங்கள் இடையூறாக வந்தாலும் நம்பிக்கை என்ற ஒன்றை இழக்காமல் தொடர்ந்து முன்னேறினால் அனைத்தும் நம் முன் அடங்கி தோற்றுவிடும் என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ள வேண்டும். சிறுசெடியாய் நாம் வளரும் போது நம்மை பிய்த்து தின்ன ஆயிரம் கருப்பு ஆடுகள் வரும். அவற்றிடமிருந்து விவேகமாக தப்பி வளர்ந்து மரமானால் அதே கருப்பு ஆடுகள் அதன் நிழலில் வந்து சேரும்.

சரி இத்தனை பேர் போராடியும் வீழ்த்த முடியாத மட்டைவீச்சாளரை ஒருவன் நினைத்தால் வீழ்த்தி விடலாம். யார் அவன்...? இவன் களத்திற்கு வரும் போது அழைத்து வந்தானே துணை ஆட்டக்காரன் அவனே. தவறான நேரத்தில் ஓடி இவனை எளிதாக வீழ்த்தி விடுவான். இதிலிருந்து வாழ்க்கையில் நாம் புரிந்து கொள்ள வேண்டிய நம்மை வீழ்த்த எதிரியால் மட்டுமல்ல உடன் இருப்பவனாலும் முடியும்.

இது முற்றிலும் உண்மை உலகப்புகழ்பெற்ற ஆட்டக்காரர் சச்சின் டெண்டுல்கர். அவரின் நெருங்கிய நண்பர் வினோத் காம்ப்ளி. இவர்களின் நட்பு அனைவரும் அறிந்த ஒன்றே. ஒரு காலகட்டத்தில் வினோத் காம்பளியால் சரிவர ஆடமுடியாமல் அணியில் இடம் பெற முடியாமல் போனது. சச்சின் தொடர்ந்து தன் திறமையால் அணியில் இருந்து பல சாதனைகளை படைத்தார். சச்சின் தன் ஓய்வை அறிவிக்கும் போது உலகமெங்கும் இருந்து வந்த கருத்து பெரும்பாலும் இரண்டு, ஒன்று நல்லமுடிவு மற்றொன்று இன்னும் விளையாடலாம். ஒரே ஒரு எதிர் மறை கருத்தும் வந்தது ‘‘இவர் ஒரு வருடத்திற்கு முன்பே ஓய்வு பெற்றிருக்கலாம்’’ என்று. அனைவரின் மனதிலும் இக்கருத்திற்கு பிறகு சச்சின் மீது ஒரு எதிர்மறை எண்ணம் வந்திருக்கலாம். இந்த கருத்தை சொன்னவர் சச்சினின் நண்பர் வினோத் காம்பளி.

புரட்சியாளர்கள் வாழ்கையில் இது நிறைய நடந்திருக்கிறது. தமிழீழ விடுதலைக்காக போராடிய என் உயிர் தலைவர் மேதகு வே பிரபாகரன் வாழ்க்கை வரலாற்றைப்

படிக்கும் போது இது நன்றாக புரிந்தது. மனமுடைந்து போய் ஒரு முறை நிருபர் ஒருவரின் உங்கள் நண்பன் யார் என்ற கேள்விக்கு தலைவர் இயற்கை எனது நண்பன், வாழ்க்கை என் தத்துவ ஆசிரியர், வரலாறு எம் வழிக்காட்டி‘‘ என பதிலளித்தார்.

வாழ்க்கை ஒரு விறுவிறுப்பான, முடிவுகள் தெரியாத விளையாட்டு. அதை விவேகமாக விளையாடி நாம் வெற்றி பெற வேண்டும். தோல்விகள் எத்தனை நம்மை நெருங்கினாலும் நாம் நம்பிக்கையை இழக்காமல் தொடர்ந்து முன்னேறினால் வெற்றி நிச்சயம். ஒவ்வொரு நாளும் வாழ்க்கை நமக்கு பலவற்றை கற்றுக் கொடுக்கிறது. கற்றுக்கொடுக்கிறது என்பது இரண்டாம் பட்சம். கற்றுக்கொள்கிறேன் என்பதே முதன்மை தத்துவம். நாம் கற்றுக்கொள்ள பழகுவோம்.

தோல்வி, ஏமாற்றம், துரோகம், புறக்கணிப்பு, விமர்சனம் என பல விடயங்கள் நம்மை நோக்கி வந்தாலும் அனைத்தையும் நம்பிக்கை என்ற ஆயுதம் கொண்டு சாகடித்து வாழ்வில் சதம் அடிப்போம்.

- மணிபாரதி தங்க சுந்தர்

---

# தமிழர் தேசம் விடியும்

அஞ்சி நடுங்குதல் இழுக்கு
எதிரியின் தாள் பணிந்து
கெஞ்சி நடத்தலும் இழுக்கு!

சுரண்டி கொழுத்தான் வளத்தை
துணிந்து கெடுத்தான் தமிழர் நிலத்தை
பொறுத்தலாகுமோ தமிழா!

நெஞ்சுரம் சிறுத்தலாகுமோ தமிழா!
பெருக்கிடுவோம் நம் தமிழர் படையை!

அழித்திடுவோம் இங்கு
அயலின வெறியை!

மறந்திட மறுப்போம்
மரபின் மறத்தை!

மனதில் ஏற்றுவோம்
தமிழர் அறத்தை!

தமிழர் வீதிகளெங்கும்
விடுதலை முழக்கம்!

இந்நாடு எமதென
போர்ப்பறை ஒலிக்கும்!

அடிமைத் தளைகள் அன்று ஒடியும்!
தமிழர் தேசம்
புதிதாய் விடியும்!

- ஆரல்கதிர் மருகன்

# பெருவுடையார் கோவில் என்னும் பேரதிசயம்



செந்தில் பக்கிரிசாமி
மன்னை

அதிசயம் என்றால் என்ன??

ஒரு விடயம் மீண்டும் நடக்க வாய்ப்பு இல்லாமல் இருப்பது அல்லது ஏற்கெனவே உருவாக்கிய ஒரு பொருளை மீண்டும் உருவாக்க முடியாமல் இருப்பது.

அப்படி பார்க்கையில் மாமன்னன் ராஜ ராஜ சோழன் எழுப்பிய தஞ்சை பெருவுடையார் கோவில் ஒரு ‘‘அதிசயமே‘‘.

அப்படி என்ன அதிசயம் உள்ளது அதில்,எல்லாரும் சொல்வது போல் அந்த கோவில் கோபுர நிழல் கீழே விழாது, அதனால் அது அதிசயம் என்று எடுத்துக் கொள்ளலாமா?? இல்லை இது வதந்தி.

பின் என்ன அதிசயம் அதில்? அதை பார்க்கும் முன் பெருவுடையார் கோவிலைப் பற்றி சில அடிப்படை விசயங்களை தெரிந்துக் கொள்வோம்.

ராஜ ராஜ சோழன் இலங்கைக்குக் கடல் வழியாக படை எடுத்துச் சென்ற போதே அங்கு உள்ள வானுயர்ந்த புத்த விகாரங்களை கண்டுப் பிரமித்து அதை போல் நம் ஊரிலும் எழுப்ப வேண்டும் என்று எண்ணினார்.

அதனால் ‘‘புத்தகயா’’ கோவிலை பார்வையிட்டு அதன் தாக்கத்தில் தமிழகத்தில் ஒரு கோவில் கட்ட வேண்டும் என்று எண்ணி கி.பி.1004 ம் ஆண்டு ஆரம்பித்தார்.

ஆகம விதிகள், சித்தர் குறிப்பேடுகள், கட்டட கலை தொழில் நுட்பம், சிற்பக்கலை. இவைகள் அடிப்படையில் இந்த கோவில் கட்டப்பட்டது.

இவற்றில் இந்த சிற்பக்கலை மற்றும் கட்டடக்கலை தொழில் நுட்பம் (structural technology) இவை இரண்டும் தான் இன்று அனைவராலும் ஆச்சரியத்தோடுப் பார்க்கப்படுகிறது. மிக வெளிப்படையாக காண்பவரை கவரும் சிற்பங்கள், சிலைகள் அனைவருக்கும் பரிச்சயம் உண்டு. இந்த நேரத்தில் சிற்பங்களுக்கும் சிலைகளுக்கும் உள்ள வித்தியாசம் அறிவோம்.

சிற்பம் என்பது அனைத்து ஜீவ ராசிகளையும் குறிக்கும். (மீன், புலி, மயில்).

சிலை என்பது மனிதர்களை மட்டும் குறிக்கும்.

இந்த கோவில் அதிசயம் என்று சொல்ல காரணம் அதன் கட்டடக்கலை தொழில் நுட்பமே.

மிக எளிதாக ஒன்றன் பின் ஒன்றாக
பார்ப்போம் எப்படி என்று.

1. முதலில் இந்த கோவிலை கட்டுவதற்கு இடம் தேர்வு செய்தது.

தஞ்சாவூர் கரிசல் மண், வண்டல் மண் மிகுந்த பகுதி. இங்கே பல நூறு டன் எடை கொண்ட கோவிலை எழுப்ப முதலில் பூமி தாங்க வேண்டும். அதற்கு இப்போது மண் பரிசோதனை செய்வது உண்டு (soil test).

ஆனால் அந்த காலத்தில் எப்படி சாத்தியம்??

சாத்தியம் ஆகியுள்ளது. தஞ்சாவூரிலேயே மிக உயரமான இடத்தில், பூமிக்கு கீழே செம்மண், செம்பாறைகள், சுண்ணாம்புப் பாறைகள் மிகுந்த மிக அழுத்தமான அதாவது ஒரு சதுர அடிக்கு 160 டன் எடையை தாங்க கூடிய இடத்தை இந்த கோவில் கட்ட தேர்வு செய்தது எப்படி! எந்த நவீன தொழில் நுட்பமும் இல்லாத காலத்தில் சாத்தியப்பட்டது என்பது ஆச்சர்யம் தானே! அதனால் தான் எத்தனை இயற்கை சீற்றங்கள் வந்தாலும் எந்த பாதிப்பும் இல்லாமல் கம்பீரமாக உள்ளது.

2. மிக உயரிய விமானம். பொதுவாக விமானத்திற்கும், கோபுரத்திற்கும் வித்தியாசம் உண்டு. கோபுரம் என்பது கோவில் நுழைவாயிலில் இருப்பது. விமானம் என்பது கருவறை மேலே எழுப்பப்படுவது.

இந்த விமானத்தின் மொத்த உயரம் 216 அடி.

இதுவே உயரமான விமானம். எனவே இனி பெரிய கோபுரம் என்று சொல்லாமல், மிகப் பெரிய விமானம் என்று சொல்வது தான் சரி. இந்த விமானம் நான்கு சுவர்களை ஒன்றோடு ஒன்றின் மீது சாய்ந்து கட்டப்பட்டுள்ளது.

3. இதனால் ஏற்படும் இழுவிசை (tensile force) இழப்பைப் போக்க விமானத்தின் உள்ளே காற்று புகும்படி வைக்கப்பட்டுள்ளது. (உள்ளீடு அற்ற உட்புறம், வெளிக் காற்றை ஆக்கிரமித்து இழுவிசையைச் சமன் செய்கிறது).

4. அடுத்துப் பொதுவாக ஒரு கல் மீது மற்றொரு கல் வைக்கும் போது அமுக்கு விசை (compressive force) ஏற்பட்டு ஒரு குறிப்பிட்ட காலத்தில் கட்டடம் விரிசல் ஏற்படும்.

ஆனால் இங்கே நம் கோவிலில் ஒரு கல் மீது மறு கல் நேர்கோட்டில் வைத்து இடைப்பட்ட பகுதியில் சிமெண்ட் பூச்சு போல் பூசப்பட வில்லை. அப்படியெனில் கண்டிப்பாக அமுக்கு விசை பாதிப்பு உண்டு.

அதற்கு மாறாக டுனுதா தீச்தூண் போன்று ஒரு கல் ப வடிவிலும் அதன் மேல் வைக்கப்படும் கல்' ப 'வை தலைகீழாக இருக்கும்படியும் செய்யப்பட்டு ஒரே நேர்கோட்டில் இல்லாமல் 'பத்தி திரிப்பு ''முறையில் சற்று கோணத்தில் பொருத்தப்படுகிறது இடையில் எந்த பூச்சு வேலையும் இல்லாமல். இதனால் எந்த காலத்திலும் அமுக்கு விசையால் எந்த நகர்வும் அசைவும் இருக்காது.

5. இது எல்லாவற்றையும் விட விமான உச்சியில் 30 அடி உயர, 80 டன் எடை உள்ள ஒரே கல்லால் ஆன விமான உச்சியுள்ளது.

இந்த 80 டன் எடையுள்ள கல்லை எப்படி 186 அடிக்கு மேலே ஏற்றி இருக்க முடியும்?

இது தான் காண்பவர் அனைவரையும் மண்டையை குடையும் கேள்வி. இன்றைய தொழில்நுட்பத்தில் கூட 80 டன் எடை உள்ள ஒரு பொருளை 186 அடி வரை தூக்கும் திறன் கொண்ட கிரென் வசதி கிடையாது.

அப்படி எனில் அந்த காலத்தில் எப்படி சாத்தியம் ஆனது?

இந்த ரகசியம் இன்று வரை உறுதியாக தெரியவில்லை. ஆனால் இப்படித்தான் செய்து இருக்க வேண்டும் என சில யூகங்கள் உள்ளன.

✸ பிதாகரஸ் தேற்றப்படி 186 அடி உயரத்திற்கு ஏற்ப ஒரு கர்ணப் பக்கம் ஏற்படுத்தி இருக்க வேண்டும். அதாவது மண்ணால் ஏற்படுத்தப்பட்ட மிக அகலமான கோபுரத்தை தொடும் ஒரு கர்ணப் பாதை. அதில் பல யானைகளைக் கொண்டு இழுத்தும், ,உருட்டியும் கல்லைக் கொண்டு போய் சேர்த்து இருக்கலாம்.

✸ மற்றொன்று சுருள்பாதை (spiral) விமானத்தை சுற்றி மண்ணால் ஆன ஒரு சுருள் பாதை ஏற்படுத்தி பின் அதில் பல யானைகளைக் கொண்டு ஏற்றி இருக்கலாம்.

எப்படி பார்த்தாலும் நமக்கு கண்ணை கட்டுகிறது அல்லவா! இது போல் இனி செய்ய முடியுமா? அதனால் தான் இது அதிசயம்.

மேலும் இதை விட பெருமை கொள்ள வேண்டிய விஷயம், இந்த கோவிலை வெறும் 7 ஆண்டுகளில் அதாவது 1010 ம் ஆண்டுக்குள் கட்டி முடித்து விட்டார்கள். வெறும் மனித உழைப்பில், மூளையில், இவ்வளவு குறுகிய காலத்திற்குள் கட்டப்பட்ட கோவில் பெரும் அதிசயம்.

மேலும் இந்த கோவிலைக் கட்ட உறுதுணையாக இருந்த அனைவர் பெயரும் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளது. மாமன்னர் ராசராசன் பெயர் உட்பட. அது தான் நமக்கு உள்ள ஆதாரம் இன்று வரை. (இல்லையெனில் வரலாறுகள் மாற்றப்பட்டு இருக்கும்).

இப்படிப்பட்ட பல ஆயிரம் எடை கொண்ட கோவிலுக்கான புதைவடை (அஸ்திவாரம்) வெறும் 5.75 அடி என்றால் நம்ப முடிகிறதா??

மணல், நீர், சுண்ணாம்பு, சிறு கற்கள் என நாம் இன்று பயன்படுத்தும் கான்கிரீட் முறையைத் தான் அப்போது பயன்படுத்தி இருக்கிறார்கள். ஆக என்ன ஒரு கணக்கிடுதல் வேண்டும் இது போன்ற ஒரு கட்டடம் உருவாக்க.

நிச்சயம் பெருமை கொள்வோம், தமிழர் தான் நம் உலகின் தலை சிறந்த கட்டட நிபுணர்கள் என்று. அதற்கு உதாரணம் இந்த ‘‘பெருவுடையார் கோவில் என்னும் பேரதிசயம்‘‘

இந்த கட்டுரையை உருவாக்க உதவியாக இருந்தது திரு. தெய்வ நாயகம் அவர்களின் ‘‘ராஜ ராஜீஸ்வரம் ‘‘புத்தகம்.

அவர் 50 ஆண்டுகள் கோவிலைப் பற்றி ஆராய்ச்சி செய்து புத்தகம் எழுதியுள்ளார். கோவிலைப் பற்றி மிக அதிகமாக தெரிந்து கொள்ள விரும்பும் நபர்கள் இந்த புத்தகத்தை படிக்க நான் பரிந்துரை செய்கிறேன்.

அந்த ‘‘ராஜ ராஜீஸ்வரம்‘‘ கடலில்  நான் அள்ளியது ஒரு குவளை நீர் மட்டுமே.

இது உங்கள் முழு தாகம் தணிக்காது..

- மன்னை செந்தில் பக்கிரிசாமி

# உணவே மருந்து



பாலாஜி பிரசாத்

ஒரு காலத்தில் நம் தமிழர் உணவு

கலாச்சாரப்படி நாம் உண்ணும் உணவே நம் உடல் நலத்தை பேணும் மருந்தாக இருந்தது. இயற்கை விவசாய முறையில் கிடைத்த நார்ச்சத்து மிகுந்த அரிசி மற்றும் பல தானியங்கள், புற்கள், வைக்கோல் இவற்றை மட்டுமே உண்ட நாட்டு மாடுகள் கொடுக்கும் பால், தாதுக்கள் நிறைந்த இயற்கையாக கிடைத்த தண்ணீர், தேன், கருப்பட்டி என ஆரோக்கியமாக உண்டு மகிழ்ந்து  உறுதியாக வாழந்தனர் நம் முன்னோர்கள்.

சோழ நாடு சோறுடைத்து சோறு என்றவுடன் நாம் எண்ணுவது நம் தமிழர்களின் பிரதான உணவாக இருந்தது அரிசி என்று. ஆனால் அது உண்மை அல்ல. மற்ற சிறுதானியங்களும் (கம்பு, கேழ்வரகு, சோளம்) நமது உணவில் இருந்தன.

பின் எப்படி நம் உணவு கலாச்சாரம் மாறியது?

15ம் நுற்றாண்டில் விசய நகர ஆட்சி பின்னர் உணவு, வியாபாரம் ஆகியுள்ளது.

அதுவரை நம் முன்னோர்கள் (தமிழர்கள்) அன்னத்தை சிறந்த தானமாக செய்துள்ளார்கள். எண்ணெயில் பொரித்த உணவு, அதிக மாவு சத்துள்ள உணவு, இனிப்பு உணவு இப்படி பல உணவு சீர்கேடு நடந்தது 15ம் நுற்றாண்டிற்கு பிறகு தான்.

இன்றைய துரித உணவு, junk foodக்கு எல்லாம் முன்னோடியாக அங்கிருந்துதான் தொடங்கி உள்ளது. அது போல் இன்றைய calorie theoryயும் ஒரு தவறான கருத்து.

இன்றைய உடல் உழைப்பும் நம் முன்னோர்கள் அளவுக்கு இல்லை. அதிக உடல் உழைப்பு இல்லாத நமக்கு தொப்பை இருக்கு ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் கடின உடல் உழைப்பு உள்ள கட்டிட தொழிலாளர்கள் மற்றும் மூட்டை தூக்கும் தொழிலாளிகளுக்கு கூட  தொப்பை இருப்பது எப்படி??

புதுதில்லியில் சேரிபகுதிகளில் வாழும் ஏழைகளின் உடல்நலனை ஆராயும் ஆய்வு ஒன்று நடைபெற்றது. இவர்களில் 65% பேர் கடுமையான உடலுழைப்பு செய்யும் தொழிலாளிகள். ஆனால் இவர்களில் 50% மக்கள் எடையுள்ளவர்களாகவும், ஆறில் ஒருவர் அதீத பருமனாகவும் இருக்கிறார்கள் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

40% பேருக்கு உயர் ரத்த அழுத்தம் உள்ளது. இந்தியாவில் நிகழும் மரணங்களில் 10%

மரணங்களுக்கு காரணம் உயர் ரத்த அழுத்தத்தால் வரும் வியாதிகளே.

20% பேர் புகைபிடிக்கிறார்கள். ஆனால் இவர்கள் யாருக்கும் தமக்கு ரத்த அழுத்தம் இருப்பது தெரியாது. வழக்கம் போல வேலைக்கு போய்க்கொண்டும், வந்துக் கொண்டும் இருக்கிறார்கள். தமக்கு உடல்நலம் நன்றாக இருப்பதாக தான் நினைத்துகொன்டுள்ளனர். உடற்பயிற்சி செய்தால் எல்லாம் இன்பமயம் என்பது போல நினைப்பவர்களுக்கு இந்த ஆய்வு ஒரு எச்சரிக்கை.

கடினமான உடல் உழைப்பு கூட தொழிலாளரை ரத்த அழுத்தம், உடல்பருமனிலிருந்து காப்பாற்றவில்லையே? முன்பு உணவு கிடைப்பது சிரமமாக இருந்தது. கடினமான உழைப்பும், குறைந்த உணவும் அவர்களை ஆரோக்கியமாக வைத்திருந்தது.

இப்போது தெருவுக்கு தெரு குப்பை உணவுகள். உணவின் விலை மிக மலிவு. நினைத்த மாத்திரம் தவறான உணவு வகைகளை சாப்பிட முடியும். அதனால் உடலுழைப்பு அதிகம் கொடுக்கும் தொழிலாளிகளை கூட அவை குண்டாக்கி வருகிறது. 40% பேருக்கு ரத்த அழுத்தம் எனில் சிகிச்சையும் எடுக்காத நிலையில் மாரடைப்பு வரும் வாய்ப்பு மிக அதிகம்.

சமையல் எண்ணெய், சர்க்கரை, உப்பு, காய்கறிகள் என நாம் அன்றாடம் பயன்படுத்தும் உணவுப்பொருட்கள் அனைத்தும் செயற்கையான முறையிலே தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த உணவுகள் நம் உடலுக்கு ஒரு குப்பை போன்றது. இந்த குப்பை உணவுகளையும், வெளியில் கடைகளில் விற்கும் மைதா வகை உணவுகள், செயற்கை முறையில் உருவாக்கப்பட்ட கோழி உணவுகள். மேலும் பல நாள் பதப்படுத்தப்பட்ட உணவுகள், வேதிப்பொருட்கள் மிகுந்த உணவுகள் இவற்றை உண்பதையும் நிறுத்தாவிடில் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் ஏழை மக்களின் மிகப்பெரிய சவாலாக அது வரும் காலங்களில் உருவெடுக்கும்.

எனவே இது போன்ற உணவுகளைத் தொடர்ந்து உண்ணும் பட்சத்தில் பிற்காலத்தில் நம் உணவு என்பது வெறும் மருந்தை மட்டும் உட்கொள்ளும் நிலைக்கு தள்ளப்படுவோம்.

எனவே இனிமேலாவது நம் பாரம்பரிய உணவு முறைக்கு மாறுவோம். உடல் நலத்தை பேணுவோம். செக்கில் ஆட்டப்பட்ட எண்ணெய், இயற்கை முறையில் பயிர் செய்யப்பட்ட தானியங்கள், மரபணு மாற்றப்படா பழங்கள், காய்கறிகள் என நமக்கான உணவை நாம் தேர்வு செய்வதே நாம் ஆரோக்கியமாக வாழ வழி.

இப்படி உடலுக்கு நன்மை தரக்கூடிய பொருட்கள் சற்று விலை அதிகம் தான், அதன் தயாரிப்பு செலவைப் பொறுத்து.

ஆனால் நம் முன்னோர்கள் முன்பே சொன்னது தான்.
''வைத்தியற்கு கொடுக்க வேண்டிய காசை, வணிகனுக்கு கொடு''

ஒருவர் சேர்த்து வைக்க கூடிய இணையற்ற செல்வம் அவர்கள் உடல் ஆரோக்கியம் தான்.

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''

நம் சந்ததிகளுக்கு ஓர் ஆரோக்கிய வாழ்வினை வழிகாட்டி விட்டு செல்வோம்.

- பாலாஜி பிரசாத்

---

# கருப்பு நாள்

இதுவும் ஒரு சாலியன்
வாலாபாக்!
ஆறாம் வகுப்பு பாடப்புத்தகத்தில்
படித்தோம்,
இன்று கண்ணெதிரே கண்டோம்!

உரிமையை கேட்டு கோசம்
எழுப்பிய வாயை
குண்டு துளைக்கிறது.

வஞ்சகர்களின் தோட்டா
நெஞ்சைப் பிளக்கிறது

இது திட்டமிட்ட படுகொலை
உரிமைக்காக கூடியவர்கள்
காக்கா குருவியாக தெரிந்திருக்கலாம்

செத்து மடிந்தவர்கள்
உங்களது பாசையில்
பிணம் எங்களுக்கு
விதைகள்


விக்னேசு மன்னை

நச்சை கக்கும்
ஸ்டெர்லைட்
ஆலையின்
அடுப்புக்கு
உங்களது
லத்திகள்
விறகுகளாக
இருக்கட்டும்

நாடு ஆளும்
கேடு கெட்டவர்களுக்கு
உங்களது லத்திகள்
ஊன்றுகோலாக
இருக்கட்டும்

பெருமுதலாளிக்காக
சொந்த மக்களை காவு வாங்கிய இந்நாள்
எங்களுக்கு கருப்பு நாள்

நாளை விருப்பு வெறுப்பின்றி
நெருப்பு பந்தங்களை கையில் ஏந்த
தூண்டிய நாள்

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal மன்னையின் மைந்தர்கள்